ISSN: 2012-6352

# தொண்டன்

ஆரம்பம் 1969 பெப்ரவரி

சமய – சமூக – இலக்கிய வெளியீடு

ஜனவரி – 2014

"புத்தாண்டே வருக!
வளம்பொங்க, வாழ்க்கை சிறக்க,
அருள் பெருக, அனைவரும் உரிமையொடு
நிமிர்ந்திட, நிலவுலகு
நித்தமும் இனிதாய் விடிந்திட....."

40/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டனி

ஜனவரி–2014

மலர் - 45 இதழ் - 11

- **ஆசிரியர்**
  லெஸ்லி ஜெயகாந்தன்
- **இணை ஆசிரியர்**
  மலர்வேந்தன்
- **துணை ஆசிரியர்கள்**
  மெற்றில்டா இராஜேந்திரம்
  பெஸ்லீயோ வாஸ்
  பைந்தமிழ்க்குமரன் டேவிட்
- **ஆலோசகர்**
  A.G.இராஜேந்திரம்
- **கணினி வடிவமைப்பு**
  சுபாஜெனி சங்கர்
- **வெளியீடு**
  சமூகத் தொடர்பு நிலையம்.
  மட்டக்களப்பு மறை மாவட்டம்
- **முகவரி**
  சமூகத் தொடர்பு நிலையம்
  அ.பெ.எண் – 44
  மட்டக்களப்பு.
- **பதிப்பகம்**
  வணசிங்கா அச்சகம்
  மட்டக்களப்பு.


## உள்ளே...

அன்புடன் உங்களோடு ..... 01
புத்தாண்டுச் செய்தி ..... 02
எண்ணிப் பார்க்கையில் ..... 03
தேரேறி வருக திசையே..... 04
மாணவர் பக்கம் ..... 05
மட்டக்களப்பு மறைமாவட்ட ..... 06
ஒடி வா புத்தாண்டே ..... 08
ஐ.நா.வின் அகில உலக ..... 09
கடுகுக் கதை ..... 11
கிஞர் மேராவின் கவிதை ..... 12
தொண்டனின் சில ..... 15
நெல்சன் மண்டேலா ..... 18
தமிழில் கிறிஸ்தவ இலக்கி ..... 19
மொழி என்பது ஒரு தேசிய ..... 22
மட்டக்களப்பு தூய வின்சன்ட் ..... 24
புனிதர்களை அறிவோம் ..... 25
விவிலியம் கற்போம் ..... 27
அறிவை வளர்ப்போம் ..... 28


ஆக்கங்களுக்குப் பொறுப்பு அளித்தவர்களே (ஆ-ர்)


SOCIAL COMMUNICATIONS CENTRE
P. O. BOX - 44
BATTICALOA.
TEL: 065 - 2226486
E.mail: scctribatti@gmail.com



விலை : 40/=
ஆண்டு சந்தா : 450/=
(தபாற் செலவு உட்பட)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புள்ள உங்களோடு....

"வேற்றுமைகளை வேரோடு களைந்து
ஒற்றுமைக்கு உரமிடப் புதிய ஆண்டு, நம்மை
அழைக்கின்றது."

நம்பிக்கையும், அவநம்பிக்கையும், சாதனைகளும், சோதனைகளும், வெற்றியும் தோல்வியும், களிப்பும் சோர்வும், கற்பனைகளும் கனவுகளும் இவைகளுக்கு மத்தியில் புதிய ஆண்டில் காலடி பதிக்கின்றோம்.

"இந்த நாளைப் பாருங்கள். இதுதான் வாழ்வின் உயிர் நாடி. இந்த நாளில் உங்கள் வாழ்வின் எல்லா வகைகளும் உண்டு. வளர்ச்சியின் இன்பம், செயலின் மேன்மை சாதனையின் சந்தோசம்."

"கடந்த காலம் என்பது கனவு: எதிர்காலம் என்பது கற்பனை: இன்று நன்றாக வாழ்ந்தால், ஒவ்வொரு கடந்த வருடமும், நாளும் சந்தோசக் கனவாகும். நாளைய நம்பிக்கையை கற்பனையாக்கும் இன்றைய நாளை மட்டும் பாருங்கள். இன்று மட்டுமே வாழுங்கள்"

புதிய ஆண்டில் வளர்ச்சியின் எழுச்சியை நோக்கி பயணம் செய்ய விழாக்கோலம் பூண்டிருக்கும் ஒவ்வொருவரும் எண்ணி இறுமாப்புக்கொள்ள வேண்டும். கடந்த காலச் சுவடுகளில் நடந்தது என்ன....? எப்படி வென்றோம்....? ஏன் தோல்வியைத் தழுவினோம்? எனப் புரட்டிப் பார்த்து புதிய ஆண்டில் புரிந்துகொள்ள நம்மை அழைக்கின்றது.

அன்னை மரியாளை நமது இதயத்துக்கு ஏற்ற அன்னையாக, மீட்பின் தாயாக ஏற்று அன்பின் ஆணிவேராக, உறவின் பாலமாக, ஒற்றுமையின் உறவாக வாழத் தாய்த் திருச்சபை நம்மை அழைக்கின்றது. தாய்மை என்றால், குழந்தையைப் பெற்றெடுப்பது மட்டுமன்று, அதனிலும் மேலாக, புதிய சமுதாயத்தை பெற்றெடுப்பதையும் உள்ளடக்கியது. அன்பு, நீதி, இரக்கம், உண்மை, பகிர்வு போன்ற மதிப்பீடுகளை நாம் பெற்றெடுக்க வேண்டும். அதனால்தான் தாய் திருச்சபை அன்னை மரியாளின் அரவணைப்பில் ஆண்டு முழுவதும் இருக்க வேண்டும், அவளின் அருள் துணை நம்மை வழி நடத்த வேண்டும் என்பதற்காக ஆண்டின் தொடக்கத்திலேயே இறைவனின் தாய் கன்னி மரியாள் என்ற விழாவைக் கொண்டாடுகின்றது.

லூக்கா 1:43 "என் ஆண்டவரின் தாய் என்னிடம் வர நான் வாய்ப்பு பெற்றது எப்படி" என்ற வார்த்தைகள் மூலம் அன்னை மரியாள் 'இறைவனின் தாய்" என அழைக்கப்படுகின்றாள்.

"அன்னை மரியாளை ஆழ்ந்து அன்பு செய்தவர்கள் பிரிவதில்லை, பிரிந்தாலும் மரியாள் அவர்களை விடுவதில்லை"

புதிய ஆண்டு முழுவதும் அன்னையுடன் ஐக்கியமாவோம்.

இந்த ஆண்டு, மனித உரிமைகள் ஆண்டாக இலங்கையில், தமிழ் மறைமாவட்டங்களில் பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது. மனித உரிமைகள் மிக மோசமான வகையில் சவாலுக்குட்பட்டுள்ள இன்றைய சூழலில் இப்பிரகடனம் முக்கியத்துவம் பெறுகின்றது. மனித உரிமைகள் எவை என்பதை ஐ.நா அமைப்பின் மனித உரிமைப் பிரகடனம் விரிவாகப் பட்டியலிட்டுள்ளது. இதனை, நமது நாடு உட்பட உலகின் பல நாடுகள் அங்கீகரித்து ஏற்றுக்கொண்டுள்ளன. ஆனாலும், நிலவும் பல்வேறு வகையான உரிமை மறுப்புகள் மனித உரிமைப் பிரகடனத்தைக் கேள்விக்குள்ளாக்குகின்றன.

சிறுபான்மையினருக்கெதிரான ஒடுக்கு முறைகள், மொழியுரிமை, மதவுரிமை, காணியுரிமை, வாழ்வுரிமை, கலாசார பண்பாட்டுரிமை போன்றவை மறுக்கப் படுகின்ற வரலாறு மிக நீளமாகவே உள்ளது. அண்மையில் திருமலை மறைமாவட்டத்தில் சின்னக்கடைப் பங்கில் நாளாந்த வழிபாட்டை நடாத்திய அருட்தந்தை அச்சுறுத்தப்பட்டுள்ளார். மனித உரிமைகள் நாளில் தமது உரிமைகளைக் கேட்டு ஊர்வலம் நடத்திய மக்கள் தாக்கப்பட்டுள்ளனர். போரினால் பாதிக்கப்பட்டு தமது நிலங்களை, வீடுகளை இழந்து அந்தரித்து நிற்கும் மக்களுக்காக குரல்கொடுக்கும் மன்னார் ஆயருக்கெதிரான கூக்குரல்களும் அச்சுறுத்தல்களும் தொடர்கின்றன. நாட்டில் சமாதானச் சூழலை உருவாக்க வேண்டி, கத்தோலிக்க ஆயர்கள் வெளியிட்ட அறிக்கை பேரினவாதிகளின் கண்டனத்திற்குள்ளாகியுள்ளது.

ஆக, மனித உரிமைகள் ஏட்டிலும் எழுத்திலும் இருந்து பயனில்லை. அது வாழ்வில் துலங்க வேண்டும்.

"கடந்த காலக் கருத்து வேறுபாடுகளையும், மனக் கசப்புகளையும் களைந்து புதிய உறவில் சங்கமிக்க புதிய ஆண்டில் சபதமெடுப்போம்"

அனைவருக்கும் எம் புதுவருட வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

- ஆசிரியர் -

இறைவார்த்தை

"இதோ உமது அடிமை, உமது வார்த்தையின்படியே எனக்கு ஆகட்டும்"

- லூக்கா 1:38 -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தாண்டுச் செய்தி

மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர்
பேரருள் தந்தை யோசப் பொன்னையா அவர்கள்

உலக வரலாற்று ஏட்டில் 2014 என்ற புதியதொரு பக்கம் திறக்கப்படுகின்றது. அவ்விதமே தனிப் பட்ட ஒவ்வொருவரின் வாழ்விலும் பக்கம் ஒன்று புதிதாய்த் திறக்கப்படுகின்றது. உலக வரலாற்று ஏட்டில் நிச்சயம் பதிவுகள் இடம்பெறப் போகின்றன. உனது தனிப்பட்ட வாழ்வின் பக்கத்தை நிரப்பப் போவது யார்?

விதைப்பது முளைக்கும் என விவசாயம் சொல்லும் புதைப்பது பூச்சியமாகும் என பூதவுடல் சொல்லும். இலட்சியங்களை சுவாசக் காற்றாய்ச் சுமந்தவர்களின் மரணம் வரலாற்றின் பக்கங்களில் விதைக்கப்படுவதால் எழுதப்படுகின்றது.

உயிரைச் சுமந்துகொண்டு 'வெந்ததைத் தின்று விதி வந்தால் மடிவோம்' என சும்மா திரியும் சோம்பேறிகளின் இருப்பு உலகியலில் புதைக்கப்படும், மறக்கப்படும்.

புதைத்துக்கொள்வாயோ...? விதைத்துக் கொள்வாயோ....?

'வெற்றியாளன்' எனும் வரலாறு தன்னை விதைத்துக் கொள்கிறவனுடையது. உள்ளதையும் இழக்கிறவனின் நிலை தன்னைப் புதைத்துக்கொள்கிறவனுடையது.

ஒரே ஒரு தடவை மட்டுமே இப் பூமிப் பந்தைக் கடந்து செல்லப் போகின்றோம். உடல் உயிர் ஆன்மாவோடு நாம் படைக்கப்பட்டுள்ளோம். இருப்பது ஓர் உயிர்! அது போகப் போவது ஒருமுறை!

ஆனால், அது நல்ல காரியத்திற்காகப் போகட்டுமே!

கிறிஸ்து இவ்வுலகைவிட்டுச் சென்று ஏறக்குறைய 2000 ஆண்டுகள் ஆகிவிட்டன. உலகம் இப்போது அழியப்போகின்றது, அப்போது அழியப்போகின்றது எனச் சொல்லி கூட்டமாக இறந்த வர்களும், ஏமாற்றித் திரிந்தவர்களும் இன்று எம்மோடு இல்லை. அவர்கள் அழிந்து போய்விட்டார்கள். ஆனால், உலகம் இன்னும் அழியவில்லை. எனவே, கடந்துவிட்டதை மறந்து முன்னோக்கிச் சென்றுகொண்டே இருக்க வேண்டும். இப்போது உயிரோடு இருக்கும் நாம் மேலும் நூற்றாண் டுகள் வாழப்போவதில்லை. ஆறிலும் சாவு வரலாம், நூறிலும் சாவு வரலாம்.

எத்தனை ஆண்டுகள் வாழ்ந்தோம் என்பதல்ல, எப்படி வாழ்ந்தோம் என்பதே முக்கியமானது. எப்போது வேண்டுமா னாலும் இறப்பு நிகழட்டும். அதுவரை கடமைகளைச் செய்துகொண்டே இருப்போம் என்ற மனநிலை நம்மில் வேண்டும். உலகம் எப்போது அழியப்போகிறது என ஆருடம் கூறுவதால் என்ன பயன்....? உலகம் அழிவது வரை நீங்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு பார்வையில் ....

வாழ்க்கை என்பது எல்லோருக்கும்
எப்போதும் ஒரேமாதிரியாக அமைவதில்லை.
அதற்குள்,
ஒருவர் வாழ்வை மற்றவர் பார்த்து ஏங்கும் நிலை!
வீட்டுக்கு வீடு வாசல்படி என்பதுபோல
ஒருவர் ஒருவருக்கு இறைவன் அளந்து வைத்தபடியே
அமைவதுதான் வாழ்க்கை.
எந்தன் வாழ்வு அடுத்தவர்க்கில்லை;
அடுத்தவர் வாழ்க்கைபோல் எனக்கில்லை.
இதைப் புரிந்துகொள்ளாமல் ஏங்கும் மனதிற்கு
என்றும் அமைதி இல்லை!
எண்ணிப்பார்க்கையில்,
நமக்குக் கிடைத்த வாழ்வோ சிறியது;
சமயத்தில்,
தொடங்கும் புதியநாளைக் காண்பதற்கோ
போதுமாகக் கூட இருப்பதில்லை.
நேற்றைய நாளின் உடைந்த சிதறல்கள்
அதனோடு ஒட்டிக் கொண்டு இருக்கும்வரை – அது
உனது அழகான இன்றைய நாளை
நொருக்கிப்போடும்,
உன்னை உயர்த்தும் நாளைய நாளை
சிதைத்துப் போடும்.
இதை உணர்ந்துவாழும் நெஞ்சுக்கு
என்றும் நிம்மதியுண்டு!

மனந்தா எஸ். இராஜேந்திரன்

நானும் உயிரோடு இருக்கப்போவதில்லை....!

இறைவன் உலகையும் அதன் உயர்ந்த படைப்பான மனிதனையும் படைத்ததைப் பற்றி இன்னும் சலிப்படையவில்லை என்கிறார் ஓர் அறிஞர். "இதோ! நான் அனைத்தையும் புதியது ஆக்குகிறேன்" (தி.வெ 21:5) என வாக்களித்த இயேசு, நேற்றும் இன்றும் என்றென்றும் வாக்கு மாறாதவர். சொன்ன வாக்கை நிறைவேற்றுபவர். நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார். "இயேசு தம் வருகையின் மூலம் நம் வாழ்வை மாற்றுகிறார்" என திருத்தந்தை பிரான்சிஸ் வலியுறுத்துகின்றார்.

பிறக்கும் ஒவ்வொரு புத்தாண்டும் இறைவன் எமக்குத் தருகின்ற புதியதொரு வாய்ப்பாகும். தம் ஆவியின் மூலம் எம் உடனிருந்து புதிய வானம் புதிய பூமியைப் படைத்துக் கொண்டிருக்கும் அவரோடு ஒத்துழைக்கத் தரும் மற்றுமொரு சந்தர்ப்பமாகும். விதைப்பதும் புதைப்பதும் அவரவர் கையில். இருளைக் குறைகூறி அர்த்தம் இல்லை. இருளைப் பழிப்பதைவிட ஒளியை ஏற்றுவதே மேல். இறைவார்த்தைகள் வாழ்வாகும்போது, செல்லும் பாதைக்கு அது வெளிச்சம் காட்டும்.

இயேசுக் கிறிஸ்துவைப் பின்பற்றி அவர் தொடங்கி வைத்த இறையரசுப் பணியை தொடர்ந்தாற்றுவோம். இந்தப் பயணத்தில் அவருடன் ஆள்நிலை உறவு கொண்டு, எதிர்ப்படும் இன்னல் இடையூறுகளுக்குப் புதுப் பொருள் தந்து, தடைக் கற்களைப் படிக்கற்களாக்கி, ஏற்படும் சவால்களுக்கு அஞ்சாது, துணிந்து எதிர்நீச்சல் போடுவோம். இயேசுவின் கனவாகிய 'புதிய வானம் புதிய பூமி' இம் மண்ணில் மலர்ந்திட ஒத்துழைப்போம். இதுவே எமது புத்தாண்டு விருது வாக்காக அமையட்டும்.

**உங்கள் அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துகள்!**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேரேறி வருக! திசையெல்லாம் ஒளிர்க!!

பொங்குக பொங்கல்
எங்கணும் மகிழ்ச்சி
தங்கிட அமைதி
தரணியில் மாந்தர்
மங்கிடா வளங்கள்
மாண்புடன் பெற்று
ஓங்கிட உழைப்போம்
பொங்கலோ பொங்கல்!

போரின் வடுக்கள்
பொல்லாக் கொடுமைகள்
வேரில்லா மரம்போல்
விழுந்துமண் சரிக!
காரிருள் கலைந்து
காலைக் கதிரவன்
தேரேறி வருக
திசையெலா மொளிர்க!

ஏறும் விலைகள்
ஏழைகள் வாழ்வை
கூறுபோட் டழிக்கும்
கொள்கைக ளென்று
மாறுங் காலம்
மண்ணில் விடியும்?
ஆறும் அன்றுதான்
அகத்தில் பொங்கல்

மத இன மொழி வெறி
மரணித்து நெஞ்சில்
மதவழி அறிந்துமெய்
அன்புடன் வாழும்
உதயப் பொழுதுஉள
உதித்திட ஒன்றாய்
இதயங்க ளிணைந்திட
பொங்கலோ பொங்கல்...!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சீரோ மலங்கரா திருச்சபை

தீருத்தந்தையின் தலைமைத்துவத்தை விரும்பாத தோமையார் கிறிஸ்தவர்கள் சிரிய பிதாப் பிதாக்களின் கீழ் இயங்கி வந்தனர். இவர்கள் 'யாக்கோபித் சீரிய திருச்சபையினர்' என அழைக்கப்பட்டனர். இவர்களுக்கான ஆயர்கள் அந்தியோக்கிய பிதாப் பிதாவினால் நியமிக்கப்பட்டு, அங்கிருந்து அனுப்பப்பட்டனர். பல வருடங்களாய் இவர்களுக்கு ஆயர்கள் இருக்கவில்லை. இது பல பிரச்சினைகளைத் தோற்றுவித்தது. அருட்தந்தை 'ஜீவர்கீஸ்' எனும் வைதீகக் குரு 1920ல் 'கிறிஸ்துவைப் பின்பற்றுவோர்' எனும் பெயருடன் ஒரு துறவற சபையினை ஆரம்பித்தார். இச்சபையின் அங்கத்தவர்கள் பெத்தனி ஆச்சிரமங்கள் என்றழைக்கப்படும் இல்லங்களில் வாழ்ந்து வந்தனர். இவ் ஆச்சிரமங்களே ஆன்மீக வாழ்வினதும், நற்செய்திப் பணியினதும் மையங்களாகத் திகழ்ந்தன. இச்சபையினை ஆரம்பித்த ஜீவர்கீஸ் எனும் வைதீகக் குரு 1920ல் மார் இவானிஸ் எனும் பெயருடன் ஓர் ஆயராகத் திருநிலைப்படுத்தப்பட்டார். கார்த்திகை 1, 1926ல் பருமலா கேரளத்தில் கூட்டப்பட்ட ஆயர் பேரவையில் இவர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் நோக்குடன் உரோமன் கத்தோலிக்க திருச்சபையில் மீண்டும் இணைவதற்குத் தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டன. இதற்குப் பொறுப்பாக ஆயர் மார்இவானிஸ் நியமிக்கப்பட்டார். இதற்கமைவாக இவர் உரோமன் கத்தோலிக்க திருச்சபையில் இணைவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டார். 20.09.1930ல் மாரி தியோபிளஸ் எனும் மற்றொரு ஆயருடன் அதிகளவான குருக்கள், இறைமக்களோடு கத்தோலிக்க திருச்சபையில் இணைந்துகொண்டனர். இச்சமூகமே இன்று சீரோ மலங்கார் திருச்சபையென அழைக்கப்படுகின்றது.

## வைதீக சீரிய திருச்சபைகள்

போர்த்துக்கேய மறைபரப்பாளர்கள் 16ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இந்தியாவுக்கு வந்த பொழுது இங்கே அவர்கள் மலபார் கரையோரப் பிரதேசங்களில் ஏற்கெனவே கிறிஸ்தவர்கள் இருந்ததைக் கண்டனர். இவர்கள் தோமையார் கிறிஸ்தவர்கள் என தங்களை அழைத்துக்கொண்டனர். இவர்கள் சீரிய திருச்சபையுடன் நெருங்கிய உறவுகள் தொடர்பினை வைத்திருந்தனர். இச்சபையின் வழிநடத்துதலின் படியே இவர்கள் வாழ்ந்து வந்தனர். இவர்களுக்குப் பணிபுரிய ஆயர்களை இச்சபையே நியமித்தது. எனவே, போர்த்துக்கேயர் தமது "பத்றோவாடோ" அதிகாரத்தினைப் பயன்படுத்தி, இவர்களைத் திருத்தந்தையின் வழிநடத்துதலின் கீழ் வருமாறு அழைத்தனர். பலர் இவ்வழைத்தலை ஏற்றுக்கொண்டனர். இவர்களே சீரோ மலபார் திருச்சபையினரெனவும், சீரோ மலங்கார் திருச்சபையினரென்றும் பார்த்தோம். இவ்வழைத்தலினை ஏற்க மறுத்த ஏனையோர் ஒன்றிணைந்து 1653ல் 'மட்டன் சேரி' எனுமிடத்தில் தங்களுக்கு நிர்வாக சுதந்திரம் கேட்டு உண்டாக்கிய "கூணன் சிலுவை ஆணை" எனும் கிளர்ச்சியினைத் தொடர்ந்து பிரிந்து தனியே சென்று, "வைதீக சீரிய திருச்சபை"யை உருவாக்கினர். பல வருடங்களாய் இவர்களுக்கு ஒரு தலைவர், ஆயர் இருக்கவில்லை. பல கீழைத்தேய சபைகளுக்கு உதவிக்காக விண்ணப்பித்தனர். யாரும் உதவ முன்

- 21ம் பக்.....



-நில்மினி கஜேந்திரன்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மட்டக்களப்பு மறைமாவட்ட மேய்ப்புப் பணி மாநாடு

# மியானி நகரில் ஒரு பொது அமர்வு

மட்டக்களப்பு மறை மாவட்ட மேய்ப்புப்பணிச் சபையின் இரண்டாவது வருடாந்த பொது அமர்வானது 16.11.2013 அன்று சனிக்கிழமை தன்னாமுனையில் அமைந்துள்ள மியானி நகரில் காலை ஏழு மணிக்குப் பெயர்களைப் பதிவு செய்தலுடன் ஆரம்பமானது. எட்டு மணியளவில் மறைமாவட்ட ஆயர் மறைமாவட்டக் கொடியை ஏற்றியதைத் தொடர்ந்து பாப்பரசரின் கொடியும், இலங்கைக் கொடியும் ஏற்றப்பட்டன. பின்னர் மறைமாவட்ட கீதம் மங்கள விளக்கேற்றல், செபவேண்டுதலுடன் பொதுநிலையினர் ஆணைக்குழு இயக்குநர் அருட்தந்தை S. டக்ளஸ் ஜேம்ஸ் அடிகளாரின் வரவேற்புரை தொடர்ந்தது. ஆயர் உட்பட வருகை தந்திருந்த அனைத்து மட்டக்களப்பு மறைமாவட்ட அருட்தந்தையர், அருட்சகோதரர், அருட்சகோதரிகள், பொதுநிலையினர் அனைவரையும் வரவேற்றுத் தலைமையுரைக்கு இடம் விட்டார். தலைமையுரையை அதிவந்தனைக்குரிய கலாநிதி ஜோசப் பொன்னையா ஆண்டகை வழங்கினார். "மறை மாவட்டத்தில் எதிர்வரும் ஆண்டினை மனித உரிமைகள் ஆண்டாகக் கொண்டு பல நிகழ்வுகள் முன்னெடுத்துச் செல்லப்படும். வேதாகமத்தில் தொடக்க நூலில் காயின் ஆபேலைக் கொன்றதும், ஆண்டவர் அதுபற்றிக் காயினை வினவ, 'நான் என்ன அவனுக்குக் காவலாளியா' என்று கேட்டான். அங்கே மனித உரிமை மீறல் ஆரம்பித்துவிட்டது" போன்ற கருத்துகளைக் கூறிமுடித்தார். தொடர்ந்து மறைமாவட்டக் குருமுதல்வரான அருட்தந்தை F.X. டயஸ் அடிகளார் சிறப்பு உரையாளரான கலாநிதி திரு. மு. தெய்வேந்திரராஜா பற்றி அறிமுகம் செய்து வைத்தார்.

பின் சிறப்புரை ஆரம்பமானது. இலங்கை கரிட்டாஸ், திட்ட மிடல் முகாமையாளரான இவர், தமது உரையை "மனித உரிமையும் திருச்சபையின் வழிகாட்டலும்" எனும் தலையங்கத்தில் ஆற்றினார். மனித உரிமை என்றால் என்ன? அதன் முக்கியத்துவம் என்ன? இது பற்றிய சிந்தனையின் ஆரம்பம் எப்போது? ஐக்கிய நாடுகள் சபையின் முயற்சிகள், சமகால மாற்றம், கால ஓட்டத்தின் வேறுபட்ட சிந்தனைகள், மனித சமுதாயத்தின் செயற்பாடுகள், இயற்கை அனர்த்தங்களால் 'பாதிக்கப்பட்டோர்' என்ற ஒரு சாராரின் கூக்குரல்கள் மனித உரிமைகள் எனும் கண்ணோட்டத்தில் பல மாற்றங்களைக் கொண்டுவந்துள்ளமை, திருச்சபையின் சமூகப் போதனை ஏடுகளில் 'வாழும் உரிமை' பற்றிப் பேசும் ஏடுகளின் பெயர்களும், அவற்றினை வெளியிட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாப்பரசர்களின் விபரங்களும் பற்றிக் கூறப்பட்டது. குடியியல் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச சமவாயம் முன்வைத்துள்ள உறுப்புரிமைகள் ஆகியவற்றையும் விளக்கி அமைத்தார். ஆயர் இது சம்பந்தமான ஆய்வுக்காக, விடயங்கள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துதல், வேதாகமம்,திருச்சபை வெளியீடுகள், மனித உரிமை சாசனம் ஆகியவற்றில் குறிப்பிடப்படுபவை, 2014ம் வருடத்தில் பங்கு, மறைக்கோட்ட, மறை மாவட்ட ரீதியில் மேற்கொள்ளக்கூடிய செயற்பாடுகள் என்பன போன்றவை பற்றிக் குழுக் கலந்துரையாடல் மூலம் விடைகள் காணப்படவேண்டுமெனப் பணிக்க, அருட்தந்தை டக்லஸ் ஜேம்ஸ் பங்குபற்றுநர்களை ஆறு குழுக்களாகப் பிரித்து அனுப்பினார்.

மீண்டும் பொது அமர்வில் குழுக்கள் தமது கருத்துப் பரிமாறல்களை முன்வைத்தனர். இவற்றை ஏற்ற சிறப்பு உரையாளர் தொகுப்பை வழங்கினார். மதிய உணவின் பின் மறைமாவட்ட மேய்ப்புப் பணிச்சபையின் வருடாந்த பொது அமர்வு ஆரம்பமானது. ஆயர் தலைமையுரை வழங்கினார். தற்காலிகச் செயலர் செல்வி. விமலினி அன்ரனியால் கடந்த கூட்டறிக்கை வாசிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டது. அருட்தந்தை டக்லஸ் ஜேம்ஸ் அடிகளாரால் பொருளறிக்கை, பொருளாளர் சமுகந் தராத காரணத்தால் வாசிக்கப்பட்டது. சில திருத்தங்களுடன் இதுவும் அங்கீகாரம் பெற்றது. தொடர்ந்து அடுத்த இரு வருட காலத்திற்கான செயலர், பொருளர், உபசெயலர் தெரிவுகள் இடம்பெற்றன. கூட்டத்திற்கு வராதோரின் விபரங்கள் சபையில் தெரிவிக்கப்பட்டன. பின் கல்முனை, மட்டக்களப்பு மறைக்கோட்டங்களிலிருந்து நிர்வாகச் சபைக்காகத் தலா ஐந்து அங்கத்

மன்னார் இராஜேந்திரம்

தவராகப் பத்துப்பேர் தெரிவுசெய்யப் பட்டனர்.

தேனீர் இடைவேளையின் பின், பங்கின் எல்லைகள் வரையறை செய்தல், ஆலையடிச்சோலை சேமக்காலையின் பரிபாலனம் பற்றிக் கலந்துரையாடப் பட்டது. இந்தவேளையில் பங்குகள் தோறும் கிறிஸ்தவ வாழ்வுச் சமுகம் ஆரம்பிப்பதை வலியறுத்திய ஆயர், அது பற்றிய விளக்கமளிக்க திரு.இருதயநாதன் அவர்களுக்குச் சந்தர்ப்பமளித்தார். பின் மறைக்கோட்ட மேய்ப்புப்பணிச் சபையில் இருந்து எழுந்த சில சந்தேகங்கள், சில பிரேரணைகட்கான பதில்களும் வழங்கப்பட்டன. நம்பிக்கையாண்டில் இறுதி நிகழ்வு எதிர்வரும் 24ந் திகதி தேற்றாத் தீவில் மாலை 5.00 மணிக்கு நடைபெறுமெனத் தீர்மானிக்கப்பட்டது. பின் புதிய செயலர் திரு. சாந்தகுமாரின் நன்றியுரையுடனும், அருட்தந்தை டக்லஸ் ஜேம்ஸ் அடிகளாரின் இறுதிச் செபத்துட னும் நிகழ்வுகள் யாவும் மாலை 5.00 மணியளவில் இனிதே நிறைவுற்றன. ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வா புத்தாண்டே....!

கோவில் மணிகள் மங்களம் இசைக்க
கொத்துக் கொத்தாய் மலர்கள் விரிய
பட்டாசுகள் பறந்து பறந்து வெடிக்க
பட்டோடு பதினாறும் கொண்டுவா புத்தாண்டே!

வறுமைகள் ஓடவும் செல்வம் கொழிக்கவும்
குரோதங்கள் மறையவும் சமாதானம் நிலைக்கவும்
இன்றுள்ள மகிழ்ச்சி இறுதிவரை நிலைக்கவும்
ஒன்றுபட்டு வாழவழி கொண்டுவா புத்தாண்டே!

பொறாமைகள் ஒழியவும், பிறசினேகம் மலரவும்
சிறுமைகள் மறையவும் சமதர்மம் நிலைக்கவும்
வெறுமைகள் நீங்கி நிறைவுகள் ஓங்கவும்
வழிகளை வகுத்துக் கொண்டுவா புத்தாண்டே!

குறைகள் கூறும் பழக்கம் ஒழியவும்
நிறைகள் காணும் பழக்கம் ஓங்கவும்
குரோத மனப்பான்மை நில்லாது ஓடவும்
அன்புக் கரம்தொடுக்க ஓடிவா புத்தாண்டே!

வயலூர் சரோஜா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.நாவின் அகில உலக மனித உரிமைப் பிரகடனம்

இவ்வாண்டு மனித உரிமைகள் ஆண்டாக மட்/மறைமாவட்ட தலத் திருச்சபையால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. உரிமையின்றி மனிதர்கள் வாழ இயலாது. நமது நாடு உட்பட உலகின் பல நாடுகளிலும் உரிமை மறுப்புகளும் அதற்கு எதிரான போராட்டங்களும் நடைபெறவே செய்கின்றன. இனம், நிறம், பால், மொழி, சமயம் என்ற பாகுபாடின்றி அனைவருக்கும் இவ்வுரிமைகள் உள்ளன. மனித குல நீண்ட வரலாற்றில் எல்லாக் காலங்களிலும் மனித மாண்பினைச் சிதைக்கும் வகையில் மனித உரிமைகள் மீறப்பட்டே வந்துள்ளன. ஆனால், மனித உரிமைகள் காக்கப் பெறவேண்டும். காப்பிற்கான கவசங்கள் உருவாக்கப்பட வேண்டும் என்ற உத்வேகம் இரண்டாம் உலகப் போரின் போது இட்லர் மனித குலத்தின் மீது நிகழ்த்திய வன் கொடுமையின் விளைவால் உருவானது. இதில் பிறப்பெடுத்ததுதான் அகில உலக மனித உரிமைப் பிரகடனம்.

**பிரகடனத்தின் நோக்கம் :**

அனைத்து மக்கள் சமுதாயங்களும் அனைத்து நாடுகளும் முயன்று அடையவேண்டிய பொது நியதியாக இந்த அகில உலக மனித உரிமைப் பிரகடனத்தை ஐ.நா. பொதுச்சபை அறிவிக்கிறது. தனிமனிதர் ஒவ்வொருவரும் ஒவ்வொரு சமூக அமைப்பும் பிரகடனத்தை எப்போதும் மனத்தில் இருத்திக்கொள்ள வேண்டியது கட்டாயமாகும். ஐக்கிய நாடுகள் அமைப்பில் அங்கம் வகிக்கும் அரசுகளின் அதிகார வரம்புக் குட்பட்ட ஆட்சிப் பரப்புகளில் வாழும் மக்கள் சமுதாயங்களுக்கிடையில் போதனை மற்றும் சுதந்திரங்களின் மீது மதிப்பை வளர்க்க முயல வேண்டும். தேசிய மற்றும் உலக அளவில் முற்போக்கான நடவடிக்கைகள் மூலம் இவ்வுரிமைகளுக்கான உலகளாவிய ஆக்க பூர்வமான ஒப்புதலையும் அவை நடைமுறைப்படுத்தப்படும் நிலையையும் அடைய ஓயாது உழைக்க வேண்டும் என்பனவே இப்பிரகடனத்தின் முதன்மை நோக்கமாகும்.

**மனித உரிமைப் பிரகடனம் :**

எல்லா மனிதர்களும் உள்ளார்ந்த சுதந்திரத்தோடும், மாண்போடும், உரிமைகளோடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமத்துவத்தோடும் பிறக்கிறார்கள். அவர்கள் பகுத்தறிவும் மனச்சாட்சியும் வாய்க்கப் பெற்ற வர்கள். எனவே, ஒருவரோடொருவர் சகோத ரத்துவ உணர்வுடன் நடந்துகொள்ள வேண்டும். இப்பிரகடனத்தில் எடுத்துரைக்கப்படும் உரிமை கள், சுதந்திரங்கள் அனைத்தும் இனம், நிறம், பால், மொழி, சமயம், அரசியல், கொள்கை, தேச அல்லது சமுதாயப் பின்னணி, சொத்து, பிறப்பு அல்லது பிறவகைத் தகுநிலை போன்ற எவ்வித வேற்று மையுமின்றி அனைவருக்கும் உரியனவாகும்.

1. உயிருக்கும் சுதந்திரத்திற்கும் பாதுகாப் பிற்குமான உரிமை ஒவ்வொருவருக் கும் உண்டு.
2. எவரையும் அடிமையாக வைத்துக் கொள்ள யாருக்கும் உரிமையில்லை. அடிமை முறையும் அடிமை வியாபார மும் அவற்றின் அனைத்து வடிவங்க ளிலும் தடைசெய்யப்பட வேண்டும்.
3. யாரையும் சித்திரவதை செய்யக் கூடாது. கொடூரமாக மனிதத் தன்மை யற்றுக் கேவலமாக நடத்தவும் தண்ட னைக்கு உட்படுத்தவும் கூடாது.
4. சட்டத்திற்கு முன் மனிதராக அங்கீகரிக் கப்படும் உரிமை ஒவ்வொருவருக்கும் உண்டு.
5. எவ்விதப் பாகுபாடுகளுமின்றி சட்டத் தின் முன் சம பாதுகாப்பைப் பெறும் உரிமை அனைவருக்கும் உண்டு. இப் பிரகடனத்தை மீறுகின்ற வகையில் மனிதரிடமிருந்து மனிதரைப் பாகுபடுத் தத் தூண்டுதல் என்பனவற்றிலிருந்து பாதுகாப்புப் பெறுகின்ற உரிமை அனை வருக்கும் உண்டு.
6. அரசமைப்போ சட்டமோ தமக்கு வழங் கிடும் அடிப்படை உரிமைகளை மீறும் குற்றச் செயல்களுக்கு அந்நாட்டின் நீதிமன்றங்கள் மூலம் தக்க பரிகாரம் பெறும் உரிமை ஒவ்வொருவருக்கும் உண்டு.
7. எவரொருவரையும் சரியான காரணமின்றிக் கைது செய்வதோ சிறைப்படுத்துவதோ நாடுகடத்துவதோ கூடாது.
8. ஒருவருக்குரிய உரிமைகளையும் கடமைகளையும் தீர்மானிக்கின்ற போதும் அவருக்கு எதிராக ஏற்கனவே குற்றவியல் குற்றச்சாட்டு இருந்தாலும் அதனை நிரூபிக்க நடுநிலை தவறாத நடுவர் மன்றத்தின்மூலம் நியாயமான, வெளிப்படையான விசாரணை கோருவ தற்கான உரிமை ஒவ்வொரு குடி மகனுக்கும் உண்டு.
9. தண்டனைக்குரிய குற்றம் புரிந்ததாகக் குற்றம் சாட்டப்பட்ட ஒருவர் வெளிப் படையான விசாரணையில் குற்றவாளி யென்று சட்டப்படி நிரூபணமாகும்வரை குற்றமற்றவராகவே கருதப்பட வேண்டும். இவ்விசாரணையில் அவரது பாதுகாப்பிற் குரிய அனைத்து உத்தரவாதங்களை யும் கோருவதற்கான உரிமை அவருக்கு உண்டு.
10. உரிய நடைமுறையைக் கடைப்பிடிக் காமல் ஒருவருடைய அந்தரங்கம், இல்லம் அல்லது கடிதத் தொடர்பு ஆகியவற்றில் தேவையின்றிக் குறுக்கி டக்கூடாது. இத்தகைய குறுக்கீடுக ளுக்கும் தாக்குதல்களுக்கும் எதிராகப் பாதுகாப்புப் பெறும் உரிமை ஒவ்வொரு வருக்கும் உண்டு.
11. தத்தமது அரசின் எல்லைக்குள் சுதந்தி ரமாய்ப் போய்வருவதற்கும் குடியிருப்ப தற்குமான உரிமை ஒவ்வொருவருக் கும் உண்டு. சொந்த நாடு உட்பட எந்த நாட்டை விட்டும் வெளியேறுவதற்கும் சொந்த நாட்டுக்கே திரும்புவதற்குமான உரிமை ஒவ்வொருவருக்கும் உண்டு.

- தொடரும் .....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்ரன் வட்டிக்குப் பணம் வாங்கிப் பழக்கப்பட்டவர் அல்ல: இனியில்லையென்ற தலைபோகின்ற அவசரத்திற்குத் தெரிந்தவர் ஒருவர் மூலமாக ஒரு தொகைப் பணத்தைக் கடனாக இன்னொரு வரிடம் பெற்றுக் கொண்டார். எழுத்து மூலமான ஆவணங்கள் எதுவுமில்லை; நம்பிக்கை யின் பெயரில் 3 சதவீத மாத வட்டிக்குப் பெற்றுக் கொண்டார்.

மாதங்கள் உருண்டன; மாதா மாதம் வட்டியை அன்ரன் கட்டி வந்தார் என்றாலும் அசலை அவரால் செலுத்த இயலவில்லை. 3 சதவீத வட்டியானது, 7 சதவீதமானது. பெற்றுக்கொண்ட கடனுக்குச் சமனான தொகைய எவு வட்டியும் கட்டியாகிவிட்டது. விபரீதத்தை உணர்ந்து கொண்டார் அன்ரன். நல்லவேளையாக அலுவலகத்தில் நல்லதோர் தொகை 'போனஸ்' கிடைத்தது.

ஓடிப்போய் வாங்கிய கடனைக் கொடுத்தார். கடன் கொடுத்தவர் சொன்னார்:

"ஐயா..... நீங்கதான் ஒழுங்காக வட்டியைக் கட்டி வந்தனீங்க! நீங்க அவசரப்பட்டுக் காசத் தரத்தேவல்ல .... ஆறுதலாத் தந்தாப் போதும். வட்டி இனி ஒன்பது சதவீதந்தான்"

அன்ரனுக்கு என்ன சொல்வதென்று தெரியவில்லை; ஆத்திரமும் வந்தது.

'என்னவோ இனாமாகத் தருவதுபோலல்லவா சொல்கின்றார். இன்னம் கொஞ்ச நேரம் நின்றால் கையில் காசத் திணிச்சிருவார் போல கிடக்கு' என்று எண்ணிய அன்ரன்,

"இல்ல..... இல்ல... இப்போதைக்கு வேணாம்; பிறகு தேவையெண்டா பாப்பம்....."

"நத்தார் செலவுக்குத் தேவைப்படுமே .... பிடிங்க... பிடிங்க...."

"என்னட்ட தேவையான காசு கிடக்கு .... நன்றி...."

"எப்படியெல்லாம் உழைக்கிறான்கள்..... பிழைக்கிறான்கள்....." என்று எண்ணிக்கொண்டார்.■

**பெருங்குவது பாலல்ல எங்கள் நெஞ்சம்**
**போதுமினிப் பட்டதுயர் யார்தான் தஞ்சம்**
**எங்களிடங் காணிமனை எவர்கைக்கோ போகுமெனில்**
**தங்கிடுமோ அமைதிவரும் வஞ்சம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிஞர் "மேரா" வின் கவிதைத் தொகுதி "மனக்காடு" ஒரு பார்வை

கடந்த பத்து ஆண்டுகளாகக் கவிதைகளை எழுதிவரும் மேரா (இயற்பெயர் - மேகராசா) பல புனைப் பெயர்களில் கவிதைகளை எழுதி உள்ளார். ஈழப்பித்தன், அரசையூரான், மேரா, மாரிமதன் என்பன அவற்றுட் சிலவாகும்.

இவர் ஏற்கனவே 'கலங்கிய வானம்' (2003), 'காலத்தின் காயங்கள்' (2007) ஆகிய கவிதைத் தொகுதிகளை வெளியிட்டுள்ளார். அவரது 3வது நூலான 'மனக்காடு' என்னும் இந்நூலில் தேர்ந்தெடுக்கப்பட்ட 33 கவிதைகள் இடம்பெறுகின்றன. இவை கவிஞரின் வித்தியாசமான சமூகப் பார்வையையும் வித்தியாசமான அணுகுமுறையையும் வெளிப்படுத்துகின்றன.

'மனம் பற்றி ஏற்கெனவே பல்வேறு உருவகங்கள் வெளிப்பட்டுள்ள இவர் மனதில் அது 'காடு' என உருவகிக்கப்பட்டுள்ளது. ஒருவகையில் பார்த்தால் இது பொருத்தமான ஓர் உருவகமாகவே படுகிறது. 'திக்குத் தெரியாத காட்டில், நாம் தேடி அலையும் எண்ணங்கள் கணக்கற்றவை. அந்த எண்ணங்கள் ஒரு காடாகவே அமைந்துள்ளன. அந்தக் காட்டினுள் நுழைந்து கவிஞர் சில பழங்களைப் பறித்துத் தந்திருக்கிறார். பல்வேறு வகையான பழங்கள். இனிப்பவை சில. கசப்பவை சில. எவ்வாறாயினும் ஒவ்வொரு பழமும் நம்மைச் சிந்திக்கத் தூண்டுகின்றன, ஆச்சரியப்பட வைக்கின்றன. இந்தப் பழங்கள் மூலம் கவிஞரின் கவித்துவ நோக்கு வெளிப்படுவதைப் பார்க்கிறோம்.

பாரதிக்குப் பின் கவிதை உலகில் ஒரு திருப்பம் ஏற்பட்டது.

எளிமை, இனிமை, கவித்துவம் என்பன அத்திருப்பத்தில் அடங்கும். இன்று, அதையும் தாண்டி புதுக்கவிதை யுகத்தில் நாம் வாழ்கின்றோம். புதுக்கவிதையைக் கூட வெறும் வசன அடுக்குகளாக இல்லாமல் வீச்சான கவிதைகளாக்குவது. உண்மையான கவியுள்ளத்தினால் முடியும். அதை இவரது பல கவிதைகளில் நாம் பார்க்கிறோம்.

பொதுவாகவே, சிறுமை கண்டு பொங்கும் உள்ளம் கவிஞர்களுக்கு உண்டு. அது அவர்களது கவிதைகளில் வெளிப்படும். சமூக அவலங்கள், அநீதிகள், அட்டூழியங்கள் கவிஞனின் உள்ளத்தைப் பொங்க வைக்கின்றன.

கவிஞர் 2010ல் எழுதிய ஒரு கவிதை இவ்வாறு அமைகிறது.

மரணத்தின் எல்லை தாண்டியும் - நான்
பல சந்தர்ப்பங்களில்
பிழைத்திருக்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரிய பாறைகள் – என் தலையில்
மோதி நொருங்கின.
நான் தடுமாறவில்லை
எனது உயிருங்கூட

இவ்வாறு அக்கவிதை தொடர்கிறது. கவிஞர்களுக்கே உரித்தான மனஉறுதி, அச்சமற்ற நிலை, எதற்கும் அஞ்சாத துணிச்சல், அக்கிரமங்களைக் கண்டு சோர்ந்து விடாத மனநிலை முதலிய வற்றை இக் கவிதையில் நாம் பார்க்கிறோம். (பங்குனி 2010)

கடந்த பல வருடங்களாக நாட்டில் நடக்கும் அக்கிரமங்களை நினைவூட்டும் வகையில் ஒரு கவிதை.

"..... வாழ்வின் வசந்தத்தைத்
தருவதாகக் கூறும் உன்னால்
பறிபோன வாழ்வின் சுதந்திரங்களைத்
திருப்பித் தரமுடியுமா என
சிந்திக்கத் தெரியவில்லை
ஆக்கிரமிப்பின் அதிகார வேட்கையில்
பலியாகிப்போன என் தாயைத் தந்தையை
சகோதரியைத் திருப்பித் தரமுடியுமா?"

நமது நாட்டில் உள்ள ஆயிரக் கணக்கான மக்களின் இதயங்களில் குமுறும் எண்ணங்களை இக் கவிதை பிரதிபலிக்கிறது. இவ்வாறான உணர்வுகள் பல கவிதைகளில் எதிரொலிக்கின்றன.

மற்றொரு கவிதை (உயிர்வலி)

புயற்காற்றில் அல்லாடுகிறது ஒரு மரம்
ஈற்றில் அது பற்று அற
மண்ணின் பிடிப்பால்
வாழ்தல் பற்றிய
புதிய கற்பிதங்களோடு மீண்டும்
நிமிர்கிறது (2009)

நமது மக்களுக்கு அவசியம் தேவைப்படும் ஒரு பாடம் இது. சோதனைகளும், வேதனைகளும் நமது சமூகத்தில் நிறைந்துள்ளன. அண்மைக்காலமாக

## செய்திகள்

திருத்தந்தை பிரான்சிஸ் திருஅவையில் கொணர்ந்துள்ள மாற்றங்களை ஒரு புரட்சி என்ற கோணத்தில் நோக்குவதற்குப் பதிலாக, திருஅவையின் வேர்களுக்கு நம்மை அழைத்துச் செல்லும் ஒரு முயற்சியாகக் காண்பதே சிறந்தது என்று வத்திக்கான் செயலர் பேராயர் பியெத்ரோ பரோலின் கூறினார்.

வறியோர் மட்டில் காட்டும் பரிவும், சமுதாயத்தின் விளிம்புகளில் வாழ்வோரைத் தேடிச் செல்லும் போக்கும் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் முதல் ஆறுமாதப் பணியின் முக்கிய அம்சங்கள் என்று அமெரிக்காவில் உள்ள பல அறிஞர்கள் கூறியுள்ளதாக 'பியூரிசர்ச் சென்டர்' என்றழைக்கப்படும் ஓர் ஆய்வு மையம் நடத்திய கருத்துக் கணிப்பின் முடிவுகள் தெரிவிக்கின்றன.

'பிஷப் சவுந்திரம் கம்பஸ் மற்றும் மீடியா சென்டர் இயக்குனரும், யாழ் பல்கலைக்கழக ஊடக விரிவுரையாளருமான ரூபன் மரியாம்பிள்ளை அடிகளின் 10வது ஊடகவியல் நூலான 'ஆசிரியர் தலையங்கம் ஓர் அறிமுகம்' என்ற நூல் தமிழியல் விருது பெற்றுள்ளது. 'எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம்' மட்டக்களப்பு மகாஜனக் கல்லூரி அரங்கில் நடத்திய விழாவில் மேற்படி விருதினை அடிகளார் பெற்றுக்கொண்டார். விருது பெற்றுக்கொண்ட நூல் இரண்டு பகுதிகளைக் கொண்டது. முதற் பகுதி ஆசிரியர் தலையங்கம் எழுதப்பட வேண்டிய விதம், அங்கு கவனிக்கப்படவேண்டிய விடயங்கள் அதன் நெளிவு சுழிவுகள் பற்றிய விளக்கமாகவும், இரண்டாம் பகுதி அடிகளார் 1997 முதல் 2007 வரையிலான 10 ஆண்டு காலப்பகுதியில் பாதுகாவலன் பத்திரிகையில் எழுதிய ஆசிரியர் தலையங்கங்களின் தொகுப்பாகவும் அமைந்திருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவை அளவுக்கதிகமாக அதிகரித்து வருகின்றன. இவற்றைக் கண்டு நாம் தளர்ந்து போகலாமா...? புயற் காற்றில் அல்லாடி ஈற்றில் தனது மண்ணின் பிடிப்பினால் நிமிர்ந்து நிற்கும் அந்தத் தனி மரம் போல நாம் துணிந்து நிற்கவேண்டும்.

கவிஞரின் கவிதை ஒவ்வொன்றும், இவ்வாறு வீச்சான, வேகமான உள்ளங்களைத் தட்டி எழுப்பும் கவிதைகளாக அமைந்திருக்கின்றன. விரிப்பிற் பெருகும். இக்கவிதை நூலுக்கு, ராஜாத்தி எழுதியுள்ள குறிப்பு, பேராசிரியர் அ.மார்க்ஸின் குறிப்பு, வெளியீட்டுரை முதலியனவும் நம்மைச் சிந்திக்கத் தூண்டுகின்றன.

மண்முனைப் பாலம் தொடர்பாக ஒரு காத்திரமான கவிதை. அதை பட்டிப்பளை பிரதேச செயலாளரும் மேற்கோள் காட்டியுள்ளனர்.

"நீ சொல் பாலம் கட்டப்படும்
மீண்டும் மீண்டும் சொல் பாலம் கட்டப்படும்
என அக்கவிதை முடிகிறது.

(நமது ஜனாதிபதி அப்பாலத்திற்கான அடிக்கல் நாட்டினாராம். பொறுத்திருந்து பார்ப்போம்)

இவ்வாறே ராஜாத்தியும் தனது குறிப்பில் ஒரு கவிதையை மேற்கோள் காட்டுகிறார்.

"என் கடவுளே!
என்னை விழுங்கவும்
நிலவைச் சுட்டுப் பொசுக்கவும்
நெஞ்சைக் கல்லாக்கி
பாறையாய்ச் சரிந்து கிடக்கவும்
கற்றுக்கொடு!"

இவ்வாறே நூலில் உள்ள கவிதை அத்தனையும் நம் மனதைத் தொடுகின்றன.

**நூல் விபரம் :**

அளவு : டிமை 1/8,
பக். : 52
விலை : ரூ. **175/=**
வெளியீடு: பட்டிப்பளை பிரதேச கலை,
இலக்கிய, சமூக அபிவிருத்தி ஒன்றியம்

— அன்புமணி —

## செய்திகள்

2010ம் ஆண்டு ஜூலையில் போலந்தின் கிராக்கோவில் கொண்டாடப்படும் 31வது உலக இளையோர் தினத்துக்கு முந்திய இந்த மூன்றாண்டுகள் ஆன்மீகத் தயாரிப்பாக மூன்று உலக இளையோர் தினங்களுக்கான தலைப்புகளை அறிவித்துள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.

2014ம் ஆண்டு அதாவது, இவ்வாண்டு கொண்டாடப்படும் உலக இளையோர் தினத்துக்கு 'ஏழைகளின் உள்ளத்தோர் பேறுபெற்றோர், ஏனெனில் விண்ணரசு அவர்களுக்குரியது' என்பதும்,

2015ம் ஆண்டு கொண்டாடப்படும் 30வது உலக இளையோர் தினத்துக்கு 'தூய்மையான உள்ளத்தோர் பேறுபெற்றோர் ஏனெனில் அவர்கள் கடவுளைக் காண்பர்' என்பதும்,

2016ம் ஆண்டு போலந்தின் கிராக்கோவில் கொண்டாடப்படும் 31வது உலக இளையோர் தினத்துக்கு 'இரக்கமுடையோர் பேறுபெற்றோர், ஏனெனில் அவர்கள் இரக்கம் பெறுவர்' என்பதும் தலைப்புகளாக அறிவிக்கப்பட்டுள்ளன.

மக்களின் சிந்தனைகளில் பாதிப்புகளை உருவாக்கும் உலகத் தலைவர்களின் தரவரிசைப் பட்டியலில் திருத்தந்தை பிரான்சிஸ் 4ம் நிலையிலுள்ளார் என்று அமெரிக்காவில் வெளியாகும் [F]oreign Policy என்ற வர்த்தக இதழ் அறிவித்துள்ளது.

அதிகாரம் என்பது, ஆளுமை செய்வதற் கல்ல மாறாக, பணி செய்வதற்கே என்பதை வலியுறுத்திவரும் திருத்தந்தை பிரான்சிஸ், தன் எளிமை, பரிவு ஆகிய பண்புகளால் உயர்ந்து நிற்கிறார் என்பதை இவ்விதழ் சுட்டிக் காட்டியுள்ளது.

புதிய கர்தினால்களை உருவாக்கும் 'கன்சிஸ்டரி' என்ற கர்தினால்கள் அவை, எதிர்வரும் பெப்ரவரி மாதம் 22ம் திகதி புனித பேதுருவின் தலைமைப் பீட விழாவன்று கூடும் என்று வத்திக்கான் அறிவித்துள்ளது.

தற்போது, கத்தோலிக்கத் திருஅவையிலுள்ள கர்தினால்களின் எண்ணிக்கை 200. இவர்களில் திருத்தந்தையைத் தேர்ந்தெடுக்கும் தகுதியுடைய 80 வயதுக்குட்பட்ட கர்தினால்களின் எண்ணிக்கை 109 ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டனின் சில நிமிடங்களில்...

- ஆழியோன் -

**இம்முறை 'தொண்டனின் சில நிமிடங்களுக்காக' மட்டக்களப்பு கடற்றொழில் மற்றும் கடலோட்டு இயந்திரவியல் கல்லூரியின் சுழியோடல் போதனாசிரியர் சிவனேசராசா மணிவண்ணன் அவர்களைச் சந்தித்தோம்.**

***டைவிங் எனப்படும் சுழியோடல் என்றால் என்னவென்று சொல்வீர்களா...?***

தொழில் முயற்சிக்காகவோ அல்லது ஆராய்ச்சிக்காகவோ கடலின் அடி மட்டம்வரை செல்வது. தொழில் முயற்சி எனும்போது அட்டை, சிங்கி இறால் பிடித்தல் போன்றவற்றைச் சொல்லலாம். ஆராய்ச்சி என்னும்போது கடல் மண்வளம், முருகைக் கற்பாறைகள், மீனினங்கள் போன்றன உட்பட கடல் வளங்களை ஆராய்தல். NARA நிறுவனம் இலங்கையில் இவ்வாய்வுகளை மேற்கொள்கின்றது.

***நீங்கள் எத்தனை வயதிலிருந்து சுழியோடலில் ஈடுபட்டு வருகின்றீர்கள்? அதில் எவ்வாறு ஈடுபாடு உண்டானது?***

மட்டக்களப்பு நாவலடி என்னும் மீன்பிடிக் கிராமத்தைச் சேர்ந்தவன் நான். என்னுடைய பாட்டனார், தகப்பனார், மாமன்மார், பெரியப்பாமார், சித்தப்பாமார், அண்ணன்மார் அனைவரும் கடற்றொழில் செய்பவர்கள். நாவலடிக் கிராமம், ஒருபுறம் மட்டக்களப்பு வாவியாலும், மறுபுறம் கடலன்னையாலும் அழகுபடுத்தப்பட்ட வளமிக்கப் பிரதேசம். பின்னர் சுனாமியால் சூறையாடப்பட்ட இடமும்கூட. நான், என் தகப்பனார், மூத்த சகோதரர்கள் ஆகியோருடன் சேர்ந்து சிறுவயதிலேயே கரைவலைத் தொழில் போன்றவற்றில் ஈடுபட்டு, பின்னர் மெல்ல மெல்ல சுழியோடப் பழகத் தொடங்கினேன். எனது மாமனார் ஒருவர் எவ்வித பாதுகாப்புக் கவசங்களுமின்றிச் சுழியோடுவதில் வல்லவர்.

பின்னர் ஓ.எல் படித்து முடித்த பின்னர் மட்டக்களப்பு – நாவலடியில் அமைந்துள்ள கடற்றொழில் பயிற்சிக் கல்லூரியில் (கடற்றொழில் மற்றும் கடலோட்டு இயந்திரவியல் கல்லூரி – (OFNE) பயிற்சியைப் பெற்றுக்கொண்டு, பின்னர் அதே கல்லூரியில் கடலோடியாக (மாலுமி) நியமனம் பெற்றேன். பின்னர் தங்காலையில் அமைந்துள்ள எமது கல்லூரியின் இன்னொரு கிளையில் (COLLEGE OF FISHERIES AND NAUTICAL ENGINEERING)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுழியோடல் சம்பந்தமான விசேட பயிற்சிநெறியைப் பெற்றுக்கொண்டேன். இதன் பயனாக எமது ஊரைச் சேர்ந்த பத்து இளைஞர்கட்கு சுழியோடல் பயிற்சிகள் வழங்கினேன். இவர்கள் சிங்கிறால், கடலட்டைகள் பிடிப்பதில் வல்லுனர்களாக உள்ளார்கள்; பின்னர் மேலும் இது தொடர்பாக மட்டக்குளியில் உள்ள தலைமையகத்தில் பயிற்சி பெற்று அவுஸ்திரேலியாவில் நிறுவனம் வழங்கும் சுழியோடுபவர்களுக்கான சர்வதேச சான்றிதழைப் பெற்றுக்கொண்டுள்ளேன்.

**சுழியோடுபர்கள் ஏன் விசேட அங்கிகளை அணியவேண்டும்?**

முகத்தில் கண்ணாடி அணியவேண்டும். தண்ணீர் கண்களைப் பாதிப்பதில் இருந்து இது பாதுகாக்கும். உடம்பில் ஜக்கட் அணியவேண்டும். தண்ணீர் அமுக்கம், அரிப்பு போன்றவற்றில் இருந்து பாதுகாப்பு. கால்களில் Fins எனப்படும் கவசம் (சிறகுபோன்று) இலகுவாக நீரில் உதைத்து நீந்தலாம். ஒட்சிசன் சிலின்டர், ரோச் லைட் இவற்றை எல்லாம் அணிந்து கொண்டு கடலில் இறங்கினால் கடல் ஜீவராசிகள் எம்மை இனங்கண்டுகொள்ளமாட்டா. எம்மையும் கடல்வாழ் உயிரினம் என்றே எண்ணிவிடும்.

இரவில் சுழியோடும்போது மட்டுந்தான் 'லைட்' பாவிப்போம். குறிப்பிட்ட இடத்தில் மட்டுந் தான் வெளிச்சப்பொட்டு தெரியும். பகலில் நாம் இறங்கும் பகுதிகளில் பட்டப்பகல்போல் கடலுக்குள் வெளிச்சம்தான்.

இதில் முக்கியமானவொன்று, மனதில் தைரியம் இல்லாத எவரும் சுழியோட தண்ணீருக்குள் இறங்கக்கூடாது. இவ்வாறான உபகரணத் தொகுதி ஒன்றின் விலை சுமார் 3 இலட்சம் ரூபாய்கள்.

**சுழியோடுபவர்கட்கு ஏதாவது விசேட நோய்ப் பாதிப்புகள் ஏற்பட வாய்ப்புகள் உண்டா...?**

ஆமாம்! 'பென்ஸ்' எனப்படும் நோய்ப் பாதிப்பு ஏற்படலாம். அதாவது, கடலில் அடித்தளத்தில் நைதரசன் வாயுதான் அதிகம் காணப்படும். நாம் சுவாசிப்பது ஒட்சிசனை. எனவேதான் ஒட்சிசன் சிலின்டர்களைக் கொண்டுசென்றாலும், தோலின் மயிர்த்துளைக் கண்களினூடாக நைதரசன் வாயு உடலினுள்ளே சென்றுவிடும். இப்படிப்பட்ட நிலையில் சுழியோடி ஒருவர் கடல்மட்டத்திற்கு மேல் வந்தால் வாயு சமனிலை பாதிக்கப்படும். உடலினுள்ளே நைதரசன் வாயு; சுற்றாடலிலே ஒட்சிசன் வாயுவின் சுவாசம். இச்சமநிலைக் குழப்பத்தினால் உடலின் தோலின் மயிர்த்துளைப்பகுதியில் கொப்புளங்கள் தோன்றி வெடிக்கும். பாரிசவாதம் உண்டாகலாம். இவ்வாறான நிலைமைகளை 'பென்ஸ்' நோய் என்று சொல்லலாம். இது மரணம் வரை கொண்டுசெல்லும்.

**இவற்றைத் தவிர்க்க வழிகள் உண்டா...?**

ஆமாம்! கடலின் அடியில் இருந்து மேல் நோக்கி வரும்போது உடனடியாக மேல் மட்டத்திற்கு வரக்கூடாது. முதல், குறிப்பிட்ட உயரத்திற்கு வந்து 10 நிமிடங்களாவது தரித்துநிற்கவேண்டும். அவ்விடத்தில் அடித்தள நைதரசனை விட குறைந்தளவு

தன் வாழ்வு மூலம் திருத்தந்தை வழங்கிவரும் சாட்சியமே தன்னை பெரிய அளவில் கவர்ந்துள்ளதாக சி.என்.பி.சி. என்ற செய்தி நிறுவனத்திற்கு அளித்த பேட்டியில் அமெரிக்க அதிபர் பராக் ஒபாமா குறிப்பிட்டார். இயேசுவின் போதனைகளுக்கு இயைந்த வகையில் தன் வாழ்வை அமைத்துக்கொண்டுள்ள ஒருவரை இத்திருத்தந்தையிடம் நேரடியாகக் காணமுடிகிறது என்றார் அவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நைதரசனும் கூடியளவு ஒட்சிசனும் இருக்கும். அப்போது உடலினுள் ஒட்சிசன் சமநிலை ஒரளவு பேணப்படும். பின்னர் இன்னும் சற்று உயரத்தில் வந்து ஓய்வெடுக்க வேண்டும். இவ்வாறு படிப்படியாகச் சமநிலைப்படுத்திய பின்னர் கடல் மட்டத்தின் மேல் வந்து ஓய்வெடுப்பது 'பென்ஸ்' நோய் வராமல் தடுக்கும்.

எனினும், 'பென்ஸ்' நோய் வந்த ஒருவரை விசேட நீர் அறைகளில் வைத்து சிகிச்சையளிக்கும் வசதிகள் உண்டு. ஆனாலும் இலங்கையில் திருகோணமலை கடற்படைத் தளத்தில் மட்டுமே இவ்வறையுண்டு. எம்மவர்கட்கு அதில் இடமளிக்கப்படுவதில்லை. ஒருவர் சுழியோடியபின்னர் 24 மணித்தியாலத்திற்குள் விமானத்தில் பயணம் செய்யக்கூடாது.

**சுழியோடல் மூலம் நீங்கள் பெற்ற அனுபவங்கள் என்ன...?**

சுனாமியின் பின் USAID நிறுவன அனுசரணை யுடன் மட்டக்களப்பு வாவியைத் துப்பரவு செய்தோம். ஏராளமாக பெரிய ரக, சிறியரக வாகனங்கள், வீட்டுத் தளபாடங்கள், ஆவணங்கள் என்பனவற்றை மீட்டோம். அதில் ஒரு புதினம் என்னவென்றால், எங்கள் மீட்புக்குழு உறுப்பினர் ஒருவரின் ஆவணங்கள், தாலிக்கொடி என்பனவும் மீட்கப்பட்டன.

பின்னர் இன்னொரு நிறுவனத்தின் உதவியுடன் கரைவலைப்பாடு பகுதிகள் துப்பரவுசெய்யப்பட்டன.

'சுவிம் லங்கா' என்னும் தொண்டு நிறுவனத்தின் உதவியுடன் 15 வயதிற்குட்பட்ட சுமார் 2000 பிள்ளைகட்கு நீச்சற் பயிற்சி கொடுத்துள்ளேன்.

கரைவலைப்பாடுகளைத் துப்பரவு செய்து கொண்டிருந்தபோது 100 அடி ஆழத்தில் வைத்து கடற்பாம்பு ஒன்று என் சகபாடியைக் கையில் கொத்தியது. உடனே, அவரின் கையில் இரத்தம் பீறிட்டது. என்ன ஆச்சரியம் என்றால் அவ்விரத்தம் பச்சை நிறமாக இருந்தது: கடல் மட்டத்திற்கு மேல் வந்ததும் அது சிவப்பாக இருந்தது. இது தொடர்பாக எனது சிரேஷ்ட விரிவுரையாளரிடம் கேட்டுத் தெளிந்தேன். கடலின் அடியில் உள்ள நைதரசன் தாக்கத்தால் அவ்வாறு ஏற்படும் என்று அவர் சொன்னார்.

**உங்கள் எதிர்காலத் திட்டங்கள் என்ன...?**

கடலுக்கடியில் "வெல்டிங்" செய்யும் பயிற்சியைப் பெறத் திட்டமிட்டுள்ளேன். அது தவிர இன்னும் 10 பேர் கொண்ட குழுவினருக்கு, மட்டக்களப்பு பிரதேச மக்களுக்கு சுழியோடும் பயிற்சியை அளிக்க உத்தேசித்துள்ளேன். வெளிமாவட்டத்தவர்கள் இங்கு கடல் வளத்தை சூறையாடுகின்றார்கள். உதாரணமாக கடல் அட்டை பிடிக்கும்போது நன்கு வளர்ந்த பெரிய அட்டைகளையே நாம் பிடிப்போம். ஆனால், அவர்கள் இளம் அட்டைகளையும் சேர்த்து அள்ளுகின்றார்கள். ஒரு வருடம் விட்டால் அவையும் வளர்ந்து அறுவடைக்கு அளவான பருவத்தில் இருக்கும்.

> முகத்தில் கண்ணாடி அணியவேண்டும். தண்ணீர் கண்களைப் பாதிப்பதில் இருந்து இது பாதுகாக்கும். உடம்பில் ஜக்கட் அணியவேண்டும். தண்ணீர் அமுக்கம், அரிப்பு போன்றவற்றில் இருந்து பாதுகாப்பு. கால்களில் Fins எனப்படும் கவசம் இலகுவாக நீரில் உதைத்து நீந்தலாம். ஒட்சிசன் சிலின்டர், ரோச் லைட் இவற்றை எல்லாம் அணிந்து கொண்டு கடலில் இறங்கினால் கடல் ஜீவராசிகள் எம்மை இனங்கண்டுகொள்ளமாட்டா.

Diving Master எனப்படும் சிறப்புச் சான்றிதழ் பெற்ற திரு. சி. மணிவண்ணன் அவர்களிடம் தொண்டனின் சார்பில் நன்றிகூறி விடைபெற்றோம். தன்னுடைய வளர்ச்சிக்குத் தன் குடும்பத்தாரும் நிறுவன உதவிப் பணிப்பாளரும் உடன் ஊழியர்களுமே காரணம் என்பதையும் குறிப்பிட அவர் மறக்கவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்னாபிரிக்க மக்களின் விடுதலை வீரராகப் போற்றப்படும் பெருந்தலைவர் நெல்சன் மண்டேலா அவர்கள் இறந்த செய்தி உலக மக்கள் அனைவரையும் பெருஞ் சோகத்தில் ஆழ்த்தியது.

தென்னாபிரிக்காவில் வெள்ளை இனத்தவரின் இனவெறிக் கொள்கையால் பெருந்துன்பங்களையும், அவமானங்களையும், அழிவுகளையும் அனுபவித்த தென்னாபிரிக்க மக்களுக்கு விடிவெள்ளியாய்த் தோன்றி அவர்களை வெளிச்சத்தை நோக்கி அழைத்துச் சென்றவர் நெல்சன் மண்டேலா அவர்கள். இதற்காக அவர் பட்ட வேதனைகள், துன்பங்கள் அளவிட முடியாதவை. தமது மக்களுக்காக அவர் நடத்திய புரட்சிகரப் போராட்டங்களை தேசத் துரோகமாகக் கருதிய வெள்ளையரது அரசு அவரை இருபத்தி யேழு ஆண்டுகள் சிறையிலே அடைத்து வைத்திருந்தது. சிறையிலிருந்து விடுதலை பெற்றபின் 71வது வயதில் தென்னாபிரிக்காவின் முதல் கறுப்பின ஜனாதிபதியாகப் பதவியேற்றார். அதன்பின் அவர் நடத்திய ஆட்சிமுறை உலக அரசியல் தலைவருக்கெல்லாம் ஒரு பாடமாகும்.

தம்மை அடக்கி, ஒடுக்கி, துன்புறுத்தியவர்களு டன் பழி உணர்வின்றி அவர் ஏற்படுத்திய நல்லிணக்கம், நாட்டின் வளர்ச்சிக்காக அனைவரையும் அவர் இணைத்துக்கொண்ட பெருந் தன்மை, பாகுபாடற்ற அவரது மொழிக்கொள்கை, பாதிக்கப்பட்ட மக்களுக்கும் பாதிப்பை ஏற்படுத்தியவர்க ளுக்கும் இடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தவும், உண்மையையும், நியாயத்தையும் அறியவும் அவர் ஏற்படுத்திய உலகப் புகழ்பெற்ற 'உண்மையைக் கண்டறியும் ஆணைக் குழு', தாம் கூறிய படியே ஐந்து வருடங்களால் ஜனாதிபதி பதவியிலிருந்து விலகிக்கொண்டு மற்றவருக்கு வழிவிட்டு ஒதுங்கிக்கொண்ட அவரது பண்பு, அதன்பின்பும் சர்வதேச அளவில் சமாதான, விழிப்புணர்வுப் பணிகளில் உழைத்த அவரது மனித நேயம் இவ்வாறு நெல்சன் மண்டேலா அவர்களின் சிறப்புகளை அடுக்கிக் கொண்டே போகலாம்.

தலைமுறை தலைமுறையாக தலைமைப் பதவியை விடாது பிடித்துக்கொள்ளவும், பதவிக்காக எதையும் செய்யவும் மற்றவரை அடக்கி, ஒடுக்கி, அழித்து தமது நலன்களையும் தம்மைச் சார்ந்தவர் நலனையும் காப்பாற்றி வளர்க்கவும் முயலும் இன்றைய அரசியல் தலைவர்கள், நெல்சன் மண்டேலாவிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டும்.

அமைதிக்கான நோபல் விருதினையும், இன்னும் பல்வேறு விருதுகளையும் பெற்றுள்ள நெல்சன் மண்டேலா அவர்கள் அடக்கி ஒடுக்கப்படும் மக்களுக்கு நம்பிக்கை நட்சத்திரமாகவும் நாடாளும் தலைவர்களுக்கெல்லாம் ஒரு பாடப்புத்தகமாகவும் என்றும் விளங்குவார்.

■ - மலர்வேந்தன் -

"நெல்சன் மண்டேலா"

ஒரு பாடப் புத்தகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழில் கிறிஸ்தவ இலக்கியங்கள்

■ றூபி வலன்ரீனா பிரான்சிஸ்
முதுநிலைவிரிவுரையாளர்
மொழித் துறை
கிழக்குப் பல்கலைக்கழகம்

உலா வரும் இயேசுக் கிறிஸ்து மீது காதல் கொள்ளும் தேவமோகினி (திருச்சபையின் உருவகம்) அழகு, இறை பக்தி மற்றும் நற்பண்பு உள்ளவளாகச் சித்திரிக்கப்பட்டுள்ளாள். இயேசுவை நினைந்து அன்பினால் ஏக்கமுறும் அவளை குறத்தி (சிங்கி) எதிர் கொள்கின்றாள். இங்கு குறத்தி என்னும் கதாபாத்திரம் விசுவாசத்திற்கான உருவகமாகும். குறத்தி தேவமோகினிக்குக் குறி சொல்கின்றாள். அவள் சொல்லும் குறியானது விவிலியச் செய்தியாக அமைகின்றது. அதனூடாக இயேசுவின் பெருமைகள் கூறப்படுகின்றன. இதனால் நாணமுறும் தேவமோகினியிடம் "உன்னை மணம் புரிவதற்கு இயேசு நாளை வருவார்" என குறத்தி கூறுகின்றாள். இச் செய்தியினால் மனம் மகிழும் தேவமோகினி பொன், பொருள் முதலானவற்றை அவளுக்குப் பரிசாக அளித்து அனுப்புகின்றாள்.

இயேசுவிடம் ஞானவலை உள்ளதென்றும் ஆசை என்னும் மாய வலையில் சிக்கித் தவிக்கும் மக்களை அந்த ஞானவலை மீட்டெடுக்கும் எனவும் கூறி இயேசுவின் புகழ் பாடிக் கொண்டு வரும் சிங்கன்,
சிங்கியைச் சந்திக்கின்றான்.
இத்தனை
காலமாய்



■ சென்ற இதழ்த் தொடர்ச்சி

தன்னிடமும் சொல்லிக் கொள்ளாமல் சென்றமையைப் பற்றி அவன் வினவ, "பெத்தலகேம் நகரின் சீயோன் குமாரிக்குப் பக்திக் குறி சொல்லச் சென்றதாகவும் அதன் காரணமாகவே தனக்கு இப்பரிசுப் பொருட்கள் கிடைத்தன" என்றும் அவள் விளக்குகின்றாள். இறுதியில் சிங்கனும், சிங்கியும் கடவுளைப் புகழ்ந்து கொண்டு வழி நடக்கின்றனர். இத்துடன் குறவஞ்சி நிறைவுறுகின்றது.

**பெத்லகேம் குறவஞ்சியின் அமைப்பு:**

பெத்லகேம் குறவஞ்சி கிறிஸ்தவ சமயக் கருத்துகளை மக்கள் பண்பாட்டிற்கு இயைய இலக்கியச் சுவையுடன் தந்துள்ளது. இக் குறவஞ்சியானது இறை வாழ்த்து, இயேசுவின் உலா, தேவமோகினியின் காதல், குறத்தி குறி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறுதல், சிங்கன் வருகை ஆகிய ஐந்து பெரும் பிரிவுகளையும், பாயிரம் முதல் வாழ்த்து ஈறாக எழுபத்திரண்டு உட்பிரிவு களையும் உடையதாக விளங்குகின்றது.

இறைவாழ்த்து என்னும் பகுதி இறை வாழ்த்து, சரணத்தரு, தோடயம், மங்களம், தோத்திரத்தரு என்னும் பிரிவுகளை உள்ள டக்கியுள்ளது.

நூலின் முதற்பகுதியில் அமைந் துள்ள பாயிரம், இக்குறவஞ்சி பாடப்பட்ட நோக்கம், இதன் பெயர், அதன் வடிவம் தொடர்பான விடயங்களைக் குறிப்பிடுகின் றது. அது வருமாறு,

பொன்னிலங்கு நித்திய சீவன்முடியை
நரர் சிரத்தில் பொலிவாய்ச் சூட்ட
மின்னிலங்கு பெத்தலேம் பதியிலுற்ற
மேசியா வேந்தன் மீது
மன்னிலங்கு சுவிசேடக் குறவஞ்சி
நாடகத்தை மகிழ்ந்து கூற
முன்னிலங்கு திரித்துவமா முழுமுதலை
ஒருபொருளை மொழிகுவேனே

என்னும் பாயிரச் செய்யுளில் பெத்த லகேம் பதியிற் பிறந்த இயேசுக் கிறிஸ்து வின் புகழைப் பாடுவதற்காக குறவஞ்சி நாடகம் என்னும் இலக்கிய வடிவத்தினை இதன் ஆசிரியர் தெரிவு செய்தமை பற்றி யும், இதனைப் பாடியதன் நோக்கம் நித்திய வாழ்வை மக்களுக்குப் பெற்றுக் கொடுப்ப தற்கேயாகும் என்றும் குறிப்பிடப்படுவதைக் காணலாம்.

கிறிஸ்துவின் பெருமையும் புகழும் இக் குறவஞ்சியில் நிறைந்து காணப்படுகின் றன. திருப்புகழ்ச் சந்தத்தில் அமைந்த கடவுள் வாழ்த்தில் இடம் பெறும் பின்வரும் செய் யுளை இதற்கு உதாரணமாகக் கூறலாம்.

திருமறைச் சுவிசேடனை ஏடனைத்
திடவாப் பிரசாதனை நீதனைத்

## செய்தி

திருத்தந்தை ஒவ்வொரு ஞாயிறு மதியவேளையில் வழங்கும் மூவேளை செப உரை நிகழ்வைக் காண்போரின் எண்ணிக்கை கடந்த ஆறு மாதங்களாக 7,50,000 பேர் என்ற அளவு கூடியிருப்பதாக ரோய் என்ற இத்தாலிய தொலைக்காட்சி நிறுவனம் அறிவித்துள்ளது. இது கடந்த டிசம்பர் மாதம் அறிவித்த குறிப்பாகும்.

மேலும், ஏழ்மைக்கு எதிராகத் திருத்தந்தையின் குரல் ஓங்கி ஒலிப்பதை அவர் திருத்தந்தையாகப் பதவி ஏற்ற நாளிலிருந்தே காணமுடிகிறது என்று கூறிய உலக வங்கியின் தலைவர் ஜிம்யோங்கிம் திருத்தந்தைக்கு இணையான ஒரு குரலை உலகத் தலைவர்கள் மத்தியில் காணமுடியவில்லை எனவும் தெரிவித்தார்.

திவிய பெத்தலை நாயனை ஆயனைச் -
செகநாயகனைத்
தரும சற்குருவானனை ஞானனைச்
சருவ வஸ்துபகாரனை வீரனைத்
தவிது இறைக் குலராசனை நேசனைச் -
சருவேசுரனைச்
குருமகத்துவ வாகனை ஏகனைக்
குவலயப் பரிபாலனை வாலனை
குறமதற்கருள் கூர்வனை நேர்வனைக் -
குருசேறினனைப்
பெருமரக்கனி யால்விளை நால்வினைப்
பிழையறத் துதியே செயமாசயப்
பெலனளித்தருண் மேவியை ஆவியைப் -
பெறுமாரருள்

திருமறையாகிய ஏட்டிலே கூறப்பட்டி ருப்பவன், அருள் புரிபவன், பெத்தலகேமின் நாயகன், ஆயனாக வழி நடத்துபவன், ஞானம் நிறைந்தவன், தாவீது குலத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோன்றியவன் சிலுவையில் அறையப்பட்டு எமக்கு விடிவு தந்தவன், மரக்கனியால் விளைந்த பயன்களை நீக்கியவன், இவ் வுலகத்தைப் பரிபாலிப்பவன் என இயேசுக் கிறிஸ்து சிறப்பிக்கப்படுகின்றார். இத்தகைய சிறப்புடைய நாதனைத் தான் பாடுவதற்கு தூய ஆவியின் அருளைத் தருமாறு புலவர் வேண்டுவதனையும் காணலாம்.

மங்களம் என்னும் பகுதியில் அமைந்துள்ள பின்வரும் பாடற் பகுதி படிப் பதற்கு இனிமையாயுள்ளதுடன் இன்றும் இப்பாடல் இசைக்கப்படுவதையும் காண முடிகின்றது.

சீரேசு நாதனுக்குச் செயமங்களம் ஆதி
திரியேக நாதனுக்குச் சுபமங்களம்
பாரேறு நீதனுக்குப் பரமபொற்
பாதனுக்கு
நேரேறு போதனுக்கு நித்திய
சங்கீதனுக்கு - சீரேசு

இயசுக்கிறிஸ்து பவனி வரும் செய்தி, பவனிச் சிந்து என்னும் பகுதியில் கூறப்படு கின்றது. யோவானால் முன்னமேயே இயேசு பற்றிக் குறிப்பிடப்பட்ட செய்தியினையும் இதிற் காணலாம்.

பவனி வந்தனரே - கேரூபின்
பவனி வந்தனரே
அவனி வாழ்த்திய பெத்லகேம் வளர்
புவனமானியர் கவன ஞானியர்
தவனு மாயனு பவனுமானவர்
நவகேரூ பீன்மேலுவையாகவே - பவனி

போதநாயகன் வந்தனன் ஐந்து
பூதநாயகன் வந்தனன்
தூதநாயகன் வந்தனன் எம
தாதிநாயகன் வந்தனன்
தூதர்நாயகன் வந்தனன் தேவ
சோதிநாயகன் வந்தனன்

வேதநாயகன் வந்தனன் என
வீதமாய் முரசொலிக்கவே - பவனி

என பவனி (உலா) வருதல் பற்றிச் சித்திரிக்கப்பட்டுள்ளமையைக் காணலாம். நாடகப் பாங்கான முறைமை இங்கு உள்ளமை குறிப்பிடத்தக்கது.

தேவமோகினியின் அறிமுகம் பின் வருமாறு அமைந்துள்ளது.

**பல்லவி**

அதிக சுபபரம சபையின் எருசலைமின்
வந்தாள் - சம்பிரமமாக
அதிக சுபபரம சபையின் எருசலைமின்
வந்தாள்

**அனுபல்லவி**

அதிக சுபபரம சபையின் மின் வந்தாள்
அறிவினுஅருமறை முறை மனது
வந்தாள்
துதிமனுவேலுட காதல் மிகுந்தெழுந்தாள்
சுவிசேட சபைமுன் மேவி யெழுந்தாள்
- அதிக

**தொடரும்....**

**மாணவர் பக்கம் .....**

வரவில்லை. இறுதியில் சீரிய அந்தியோக்கிய பிதாப்பிதா இவர்களுக்கு உதவ முன்வந்தார். இச்சபையானது 1912வரை அந்தியோக்கிய பிதாப்பிதாவின் நேரடி அதிகாரத்தின் கீழ் இருந்து வந்தது. இதன் விளைவாகப் பல ஆண்டுகள், பல பிரச்சினைகளை இவர்கள் எதிர்நோக்க வேண்டி இருந்தது. பின்னர், 1912ல் இது இரு சபையாகப் பிளவுபட்டது. அவையாவன,

1. மலங்கரா சீரிய வைதீக திருச்சபை (ஜாக்கோபித்தர்)
2. மலங்கரா வைதீக சீரிய திருச்சபை (கீழைத்தேய கத்தோலிக்கர்)

என்பனவாகும். இவர்களுக்கி டையிலான இப்பிளவு இன்றும் தொடர்கிறது....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொழி என்பது ஒரு தேசிய இனத்தின் அடையாளம்

அருட்திரு. தமிழ்நேசன் அடிகளார்

மொழி என்பது வெறும் ஒலி மட்டும் அல்ல! மொழி என்பது வெறும் தகவல் தொடர்பு சாதனம் மட்டுமல்ல! மொழியைப்பற்றிப் பேசுகின்றபோது, 'மொழி என்பது எண்ணங்களை எடுத்துச்செல்லும் ஊடகம்தானே' என்று சிலர் சாதாரணமாகச் சொல்லலாம். ஆனால் மொழியின் பரிமாணங்கள் பரந்துபட்டன. மொழி என்பது ஒரு தேசிய இனத்தின் அடையாளம்! மொழி இல்லையேல் ஓர் இனம் இல்லை. மொழி இல்லையேல் ஓர் இனத்தின் இலக்கியங்கள் இல்லை, கலைகள் இல்லை, பண்பாடு இல்லை, மரபுகள் இல்லை, சமயங்கள் இல்லை. ஓர் இனத்தின் இலக்கியங்களை, கலைகளை, பண்பாடுகளை, சமய நம்பிக்கைகளை தாங்கி நிற்பது மொழி. இவ்வாறு மட்டக்களப்பில் நடைபெற்ற தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளார் நூற்றாண்டு விழாவின் முதல் நாள் நிகழ்வில் கலந்து சிறப்புரையாற்றும் போது மன்னார் தமிழ்ச் சங்கத்தின் தலைவரும், மன்னார் மறைமாவட்ட கலையருவி இயக்குனருமான அருட்திரு. தமிழ்நேசன் அடிகளார் குறிப்பிட்டார்.

மட்டக்களப்பு தனிநாயகம் அடிகளார் நூற்றாண்டு விழாச் சபையின் ஏற்பாட்டில் மட்டக்களப்பு மகஜனாக் கல்லூரியில் இடம்பெற்ற இந் நிகழ்வில் சிறப்புரையாற்றிய தமிழ்நேசன் அடிகளார் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது, உலக வரலாற்றுப் பக்கங்களைத் திருப்பிப் பார்த்தால் ஓர் உண்மை நமக்குத் தெளிவாகும். அதாவது ஓர் இனத்தை அழிக்க வேண்டும் என்றால் எதிரிகள் முதலில் அந்த இனத்தின் மொழியை அழித்திருக்கின்றார்கள். மொழி அழிந்தால் ஓர் இனம் தானாகவே அழிந்துவிடும்.

'மொழி' என்பது ஒரு தலைமுறை அடுத்த தலைமுறைக்குத் தன் பண்பாட்டை எடுத்துச் செல்லும் வழி. தமிழர்களாகிய நம்மைப் பொறுத்த வரை தமிழ் மொழி என்பது வெறும் 'வழி' மட்டுமல்ல, அதுதான் நமது 'விழி'. ஏனென்றால், இரண்டாயிரம் ஆண்டுகால தமிழின் எழுச்சி - வீழ்ச்சி, தமிழின் வெளிச்சம்- இருட்டு, தமிழின் மேடு-பள்ளம் இவற்றை உற்றுப் பார்த்தால் ஓர் உண்மை புலப்படும். அதாவது தமிழனின் மொழிக்கு ஊறு நேர்ந்தபோதெல்லாம் அவனது அரசியல், பொருளாதார, பண்பாட்டின் அடித் தளங்கள் ஆட்டம் கண்டிருப்பதைப் பார்க்கின்றோம்.

தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளார் தமிழுக்காகவே தன் வாழ்வை அர்ப்பணித்த ஒரு கத்தோலிக்கக் குரு. அவருடைய தமிழ்ப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நமது ஆண்டு நினைவு

## 24.12.2013

மலர்வு

17 ✺ 07 ✺ 1922



உதிர்வு

25 ✺ 12 ✺ 2006

**அமரர் நல்லதம்பி அலோசியஸ் ஆறுமுகம்**

(இளைப்பாறிய அதிபர்)

**"உண்மையாகவே என் வாழ்நாள் எல்லாம் உம் அருள் நலமும் பேரன்பும் என்னை புடைசூழ்ந்துவரும், நானும் ஆண்டவரின் இல்லத்தில் நெடுநாள் வாழ்ந்திருப்பேன்"**

- திபா 23:6 -

*தகவல் :*
குடும்பத்தினர்,
வந்தாறுமூலை.

பணிகளை மதிப்பீடு செய்த அறிஞர்கள் அவரைப் பற்றி கூறும் வார்த்தைகள் உண்மையில் நம்மை மெய்சிலிர்க்க வைக்கின்றன. "தமிழை உலக வரைபடத்தில் பொறித்தவர் தனிநாயகம் அடிகளார்." புலவர்களுக்குள்ளும் பண்டிதர்க ளுக்குள்ளும் முடங்கிக் கிடந்த தமிழை தனிநாயக அடிகளார் உலக அரங்கில் ஏற்றி வைத்தார்! "இருபதாம் நூற்றாண்டில் இவரைப்போல் உலகளாவிய தமிழ்ப் பணி புரிந்தவர் வேறெவரு மில்லை!" இந்த வார்த்தைகளை மேலோட்ட மாகப் பார்த்தால் சிலவேளை மிகைப்படுத்தப் பட்ட வார்த்தைகளாகத் தெரியும். ஆனால் தனிநாயகம் அடிகளாரின் பரந்த தமிழ்ப் பணி களை ஆழமாக நோக்கினால் இந்த வார்த்தை கள் உண்மையான வார்த்தைகள் என்பதை எவரும் இலகுவில் புரிந்துகொள்வர். ■

வாழ்வதற்கான உரிமை என்பது, பிறப்பதற்கான உரிமையையும் உள்ளடக்கியது என்பதால் கருவிலிருந்தே குழந்தைகளுக்குப் பாதுகாப்பு வழங்குவதை ஒவ்வோர் அரசும் உறுதிசெய்ய வேண்டும் என ஐ.நா.வின் 68வது பொது அவைக் கூட்டத்தில் உரையாற்றிய ஐ.நாவிற்கான திருச்சபையின் நிரந்தரப் பார்வையாளர் பேராயர் பிரான்சிஸ் சுள்ளிக்காட் கூறினார்.

இதேவேளை, உலக அளவில் கிறிஸ்தவர்களுக்கு எதிரான அடக்கு முறைகள் கடந்த இரண்டரை ஆண்டுகளில் அதிகமாகி இருக்கின்றன என்று மத சுதந்திரம் குறித்த புதிய ஆய்வு ஒன்று கூறுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தூய வின்சன்ட் டி போல் சபை நடாத்திய விவிலிய வினாவிடைப் போட்டி

மட்டக்களப்பு பிராந்திய தூய வின்சன்ட் டி போல் சபையானது வருடா வருடம் மட்டக்களப்புப் பிராந்தியத்திற்குட்பட்ட பாடசாலைகள் மத்தியில் ஆண்டு 09, 10, 11 மாணவர்க்கிடையே ஒரு பிரிவாகவும், ஆண்டு 12 மற்றும் 13 மாணவருக்கிடையே இன்னுமொரு பிரிவாகவும் விவிலிய வினாவிடைப் போட்டியொன்றை நடாத்துவது வழமை. இம்முறை இந்தப் போட்டிகள் கணினி மயமாக்கப்பட்டு தெரிவுசெய்யப்படும் கேள்விகள் திரையில் தெரியவும், உரிய விடைக்குப் பதில் கொடுத்தால் பாராட்டு என்றும் தவறான விடை கொடுத்தால் விடை தவறென்றும் தகவல் வரும் வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தமை புதுமையாக இருந்தது. இலங்கையிலே முதற் தடவையாக விவிலிய வினாவிடைப் போட்டியொன்று கணினி மூலம் நடத்தப்படுவது இதுவே முதற் தடவையாகும். இதற்கான மென்பொருள் வடிவமைப்பை திரு. ரவீந்திரா இராஜேந்திரம் மற்றும் அவருடைய IDM தாபனத்தைச் சேர்ந்த ஆசிரியர்களாலும் உருவாக்கப்பட்டிருந்தது.

அதுமாத்திரமல்ல, இம்முறை கேள்விகள் வழமை போன்று நற்செய்தி (லூக்கா நற்செய்தி), தூயவின்சன்ட் டி போல் வரலாறு, அருளாளர் பிரடெரிக் ஒஸானம் வரலாறு என்பவற்றிலிருந்தும், முதல் முறையாக, ஜனவரி முதல் செப்டெம்பர் வரை வெளியிடப்பட்ட வெட்டாப்பு பத்திரிகை, தொண்டன் சஞ்சிகைகளிலிருந்தும், தூய வின்சன்ட் டி போல் சபையின் சர்வதேச வலைப் பின்னல் தொடர்பாகவும் எடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இம்முறை 10.11.2013 அன்று தாண்டவன்வெளி பேர்டினண்ட்ஸ் மண்டபத்தில் மொத்தமாக 15 பாடசாலைக் குழுக்கள் இரு பிரிவுகளிலும் கலந்து கொண்டன. இதற்கான பரிசளிப்பும் நத்தார் விழாவும் 08.12.2013 அன்று சார்ள்ஸ் மண்டபத்தில் இடம்பெற்றன.

தகவல் :

**ஆனந்தா A.G. இராஜேந்திரம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனிதர்களை அறிவோம்...!

மார்கழி – 2013 – பெருவிழா நிராஜேந்திரம் –

| ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி |
|---|---|---|---|---|---|---|
| | | | 1 புனித மரியன்னை | 2 புனித பசிலும் கிரகறியும் | 3 புனித ஜெனிவிவ் புனித சவாரா கூரியாக்கோஸ் | 4 முத்திப்பேறு பெற்ற எலிசபெத் ஆன் செட்டன் |
| 5 புனித ஜோன் நியுமன் ஆண்டவரின் திருக்காட்சி | 6 புனித அன்றூ கொர்சினி | 7 புனித றேமன்ட் | 8 புனித அல்பொலி னரிஸ் | 9 புனித ஜூலியன் புனித ஏட்ரியன் | 10 புனித வில்லியம் | 11 புனித பவுலினஸ் |
| 12 ஆண்டவரின் திருமுழுக்கு புனித பெனடிக்ற் பெனற் | 13 புனித ஹிலரி | 14 புனித பெலிக்ஸ் புனித சேவா | 15 வனவாசியான புனித பவுல் புனித ஐடா | 16 முத்திப்பேறுபெற்ற யோசப்வாஸ் புனித மார்செலனஸ் புனித பெரார்டும் தோழரும் | 17 புனித வனத்து அந்தோனியார் | 18 புனிதர்களான வொலசியனும் டெய் கொலசும் |
| 19 புனித கனியூட் புனித வூல்ஸ்மன் | 20 புனித செபஸ்தியார் | 21 புனித அக்னஸ் | 22 புனித சரகோசா வின்சன்ட் புனித வின்சென்ட் பல்லொட்டி | 23 புனித எமரன்னரன் புனித இல் டெபோன்சஸ் | 24 புனித பிரான்சிஸ் டிசாலேஸ் | 25 புனித பவுலின் மனமாற்றம் |
| 26 புனிதர்களான திமோத்தியும் தீத்துவும் | 27 புனித ஆஞ்சலா மெரிசி | 28 புனித அக்தோமஸ் புனித தோமஸ் அக்வினாஸ் | 29 புனித கொன்ஸ்ரன்ஸ் புனித கில்டாஸ் | 30 புனித மார்ட்டீனா புனித பேத்தில்டிஸ் | 31 புனித ஜோன் பொஸ்கோ | |

## தை 20 : புனித செபஸ்தியார்

இவர் நார்போனில் பிறந்து, மிலான் தேசத்தில் கல்வி கற்று உரோமாபுரியில் 284ம் வருடம் மறைசாட்சியானவர். 283ம் வருடத்தில் உரோமைச் சக்கரவர்த்தி கரினஸின் படைவீரராகச் சேர்ந்தார். டயகிளேசிய மன்னன் கிழக்குக்குச் சென்றதும் மக்ஸி மில்லனை மகிழ்ச்சிப்படுத்தியதால், சக்கரவர்த்தியின் உதவியாளராக நியமனம் பெற்றார். இவர் தமது சமயத்தை மிகவும் மறைவாகவும், கவனமாகவும் அனுசரித்து வந்தார். ஆனால், இறுதியாக இது வெளிப்பட்டு டயக்கிளேசியன் முன் குற்றவாளியாக நிறுத்தப்பட்டார். அவன் அம்புகளால் எய்து கொல்லும்படி கட்டளையிட்டான். குற்றுயிராய்க் கிடந்த இவர் ஒரு பக்திமிகு பெண்ணின் கனவில் காட்டப்பட்டுக் கண்டுபிடிக்கப்பட்டு இரகசியமாக வைத்துக் குணமாக்கப்பட்டார். பூரண குணமானதும் சக்கரவர்த்தியின் முன்சென்று கிறிஸ்தவர்களுக்கெதிராக அநீதியாகச் செயற்படுவதைக் கண்டித்தார். தான் கொல்லப்பணித்த செபஸ்தியாரை உயிரோடு மீண்டும் கண்டதும் வியப்படைந்து, அவரைக் குண்டாந்தடியால் அடித்துக் கொல்லக் கட்டளையிட்டான். இவரது திருவுடல் சாக்கடையில் தூக்கியெறியப்பட்டது. ஆனால், ஒரு பக்தி மிக்க பெண்மணியால் அங்கிருந்து அகற்றப்பட்டு இரகசியமாகக் கொண்டு செல்லப்பட்டுக் கல்லறையில் நல்லடக்கம் செய்யப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### தை 23 : புனித இல்டெபோன்சஸ்

607ம் வருடம் ஸ்பெயின் நாட்டின் மிக மரியாதைக்குரிய பிரபுக்கள் குடும்பமொன்றில் பிறந்தார். புனித கன்னிமரியா மீது அளவற்ற பக்திமிக்கவராய்த் தம்மை அதற்காக அர்ப்பணித்துப் பல பணிகளை மேற்கொண்டார். செவில்லியில் உள்ள புனித இசிடோர் கல்லூரியில் கல்விகற்றார். சிறு வயதிலேயே டொலெடோவுக்கு அருகிலிருந்த அகாலியாவின் பெனடிக்டைன் மடாலயத்தில் சேர்ந்து அதன் தலைவரும் ஆனார். இந்த மடாலயத்தின் சார்பாக 653ம் வருடத்திலும் 655ம் வருடத்திலும் டொலெடோ சபையில் அங்கத்துவம் வகிக்க வேண்டியிருந்தது. 657ம் வருடம் அவரது உறவினரான புனித யூஜினியஸ் மற்றும் குருக்கள், பொதுநிலையினர் அனைவரும் இணைந்து இப்பரிசுத்த மனிதரை அதிமேற்றாணியாராகத் தெரிவுசெய்தனர். 667ம் வருடம் இவர் இறக்கும் வரை பிரமாணிக்கமுடன் பணிபுரிந்தார். இவரது வாழ்க்கை வரலாற்று நூலிலிருந்து, அன்னை மரியா தோன்றி இவருக்குப் பூசைக்குப் பயன்படுத்தப்படும் கிண்ணத்தைக் கொடுத்ததாக அறியமுடிகிறது. வளமான எழுத்தாளர், துரதிஷ்டவசமாக இவரது படைப்புகளில் நான்கை மட்டுமே காக்கமுடிந்தது. இவற்றில் ஒன்று 7ம் நூற்றாண்டின் முதல் மூன்றில் இரண்டு பகுதிக் காலத்தில் ஸ்பானிய திருச்சபையின் வரலாறு பற்றியது. மிக முக்கிய ஆவணமாக இது உள்ளது. இது பல பிரபல்யம் மிக்க மனிதர்களுக்கு உரிமையாக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. ●

திருஅவையில் மாற்றம் கொண்டு வருவதற்கு தான் முயற்சிப்பதாகவும், இதன்மூலம் திருஅவை மீண்டும் இறை மக்களின் சமூகமாக மாறும் எனவும் "லா ரிபப்லிக்கா" என்னும் இத்தாலிய தேசிய நாளிதழுக்கு அளித்த தனிப்பட்ட நேர்காணலில் கூறியுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.

ஆன்மாக்களைக் கவனிக்கும் பொறுப்பைக் கொண்டிருக்கும் ஆயர்களும், குருக்களும், அருட்பணியாளர்களும் இறைமக்களின் சேவையில் தங்களை அர்ப்பணிக்கும் இடமாக இறை மக்களின் சமூகம் அமையும் என்றும் இந் நேர்காணலில் கூறியுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.

திருஅவையின் பணி, மதம் மாற்றுவது அல்ல. மாறாக, மக்களின் தேவைகள், ஆசைகள், ஏமாற்றங்கள், மனச்சோர்வுகள், நம்பிக்கைகள் ஆகிய வற்றுக்குச் செவிமடுப்பதாகும் என்றும் தெரிவித்துள்ளார் திருத்தந்தை.✷

தனி மனிதர் மீது முதலில் கவனம் செலுத்தினால் மட்டுமே மனிதரின் ஆன்மீகம் உட்பட அவரின் ஒவ்வொரு கூறும் கவனத்தில் எடுக்கப்படும். மனித வளர்ச்சி முழுமை பெற்றால் மட்டுமே நல்லதோர் உலகு அமையும் என்று கூறியுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ். ஏழைகள், நோயாளிகள், கைதிகள், தேவையிலிருப்போர், அந்நியர் ஆகியோர் உட்பட யாரும் ஒதுக்கப்படாமல் இருந்தால் மட்டுமே, எதையும் தூக்கி எறியும் கலாசாரத்தை முறியடிக்க முடியும். சந்திக்கும் அனைவரையும் ஏற்றுக் கொண்டால் மட்டுமே நல்லதோர் உலகு அமையும் என்று கூறியுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.

✷



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவர்களுக்கு மட்டும்

பரிசுப் போட்டி

# விவிலியம் கற்போம் - 127

முடிவுத் திகதி 31.01.2014

## யோசுவா அதிகாரங்கள் 5, 6

**(பொருத்தமான சொற்களைத் தெரிந்து இடைவெளிகளை நிரப்புக)**

மேலை யோர்தானில் இருந்த எமோரிய நாட்டு அரசர்களும் கடலுக்கு அருகிலிருந்த கானானிய மன்னர்களும் ஆண்டவர் யோர்தான் நீரை இஸ்ரயேலர் கண்முன் அவர்கள் கடக்கும்வரை வற்றச் செய்தார் என்று கேள்விபுற்ற பொழுது, அவர்களின் ..... கலக்கமுற்றன. இஸ்ரயேலர் முன் அவர்கள் மனந்தளர்ந்தனர். அப்பொழுது ஆண்டவர் யோசுவாவிடம் "கற்களால் கத்திகள் செய்துகொள். இஸ்ரயேலருக்கு மீண்டும் விருத்தசேதனம் செய்" என்றார். அவ்வாறே யோசுவா கற்களால் கத்திகள் செய்தார். ..... எனும் இடத்தில் விருத்தசேதனமும் செய்தார். இதன் காரணம் எகிப்திலிருந்து வெளியேறிய மக்களில் போர் வீரரான ஆண்கள் வரும் வழியில் பாலைவனத்தில் இறந்துவிட்டனர் என்பதே! பாலைவனத்தில் பிறந்த எவருக்கும் விருத்தசேதனம் செய்யப்படவில்லை. நாற்பது ஆண்டுகள் ..... அலைந்தனர். ஏனெனில், அவர்கள் ஆண்டவரின் குரலைக் கேட்கவில்லை. ஆகவே, ஆண்டவர் அவர்களுக்குக் கொடுப்பதாக உறுதியளித்திருந்த பாலும், தேனும் வழிந்தோடும் நாட்டை அவர்கள் காணக்கூடாதென ஆணையிட்டுக் கூறினார். அழிந்தவர்களுக்குப் பதிலாக, அவர்களின் பிள்ளைகளுக்கு யோசுவா ..... செய்தார். பின் அவர்கள் குணமாகும் வரை அங்கேயே பாளையத்தில் தங்கினர். ஆண்டவர் யோசுவாவிடம் "இன்று எகிப்தியரின் பழிச்சொல்லை உங்களிடமிருந்து நீக்கிவிட்டேன்" என்றார். ஆகவே, அந்த இடம் இன்றுவரை ..... என்று அழைக்கப்படுகின்றது. இஸ்ரயேலர் இங்கு தங்கினர். மாதத்தின் பதினான்காம் நாள் மாலை எரிக்கோ சமவெளியில் பாஸ்கா கொண்டாடினர். மறுநாள் நிலத்தின் விளைச்சலையும், புளிப்பற்ற அப்பத்தையும், வறுத்த தானியத்தையும் உண்டனர். விளைச்சலை உண்ட மறுநாளில் இருந்து ..... மீண்டும் கிடைக்கவில்லை. யோசுவா எரிகோவில் இருந்தபோது ஓர் ஆடவர் கையில் உருவிய கத்தியுடன் நிற்க, அவர் அவரிடம் சென்று, "நீர் எங்கள் பக்கமா? அல்லது எதிரிகள் பக்கமா?" எனக் கேட்டபோது, "நான் ஆண்டவரின் படைத்தலைவன், உன் காலணியை அகற்று. ஏனெனில், நீ நிற்குமிடம் புனிதமானது" என அவரும் செய்தார். இஸ்ரயேலருக்கு எரிகோ ..... . கடவுள் யோசுவாவிடம் "எரிகோவையும் அதன் மன்னர், போர் வீரர் அனைத்தையும் உன் கையில் ஒப்படைத்தேன். நீங்கள் நகரை ஒருமுறை சுற்றி வாருங்கள். இவ்வாறு ஆறு நாட்கள் செய்யுங்கள். ஏழாம் நாளில் ஏழுமுறை சுற்றுங்கள். அப்பொழுது குருக்கள் எக்காளம் முழங்கட்டும். அதைக் கேட்டதும் நீங்கள் ..... எழுப்புங்கள். அப்பொழுது நகரின் மதில்கள் இடிந்துவிழும். உடனே மக்கள் அவரவர்க்கு முன் உள்ள பகுதிக்கு ஏறிச்செல்ல வேண்டும்" என்றார். அவ்வாறே செய்தனர். நகரில் இருந்த அனைத்தையும் அழித்தனர். அவர்களது வீரர்களைக் காப்பாற்றிய ..... அவர் குடும்பத்தையும் உறவினரையும் தப்பவைத்து அழைத்து வந்து பாளையத்துக்கு வெளியே தங்க வைத்தனர். அச்சமயம் யோசுவா எழுந்து "எரிகோ என்னும் இந்நகரை மீண்டும் கட்டும் மனிதன் சபிக்கப்பட்டவன். அவன் கடைகால் இடுகையில் தன் முதல் ....., அதன் வாயிற்கால்களை இடுகையில் தன் கடைசி மகனையும் இழப்பான்" என்றார். ஆண்டவர் யோசுவாவுடன் இருந்தார். அவரது புகழ் நாடு முழுவதும் பரவிற்று.

**விடைகள்:** **விருத்தசேதனம், கில்கால், இராகாபையும், மகனையும், பேரொலி, கிபயத்துகாரலோத்து, பாலைவனத்தில், மன்னா, இதயங்கள், அஞ்சியது.**

(விண்ணப்படிவத்திலேயே விடைகள் எழுதியனுப்பப்பட வேண்டும். பிரிதாக அனுப்பப்படும் விடைகள் போட்டியில் சேர்த்துக் கொள்ளப்படமாட்டாது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவை வளர்ப்போம் - 127

## பரிசுப் போட்டி

(பொருத்தமான சொற்களின் கீழ் அடிக்கோடிடுக)

1. உலகை முதன் முதல் கடல்மார்க்கமாகச் சுற்றி வந்தவர்
(மெகல்லன் - மார்க்கோபோலோ - தொலமி)

2. உலகில் இறப்பு விகிதம் குறைவான நாடு
(பிரித்தானியா - குவைத் - மெக்சிக்கோ)

3. 'லிட்டில் மாஸ்டர்' என்று உலகம் முழுவதும் அழைக்கப்படும் கிரிக்கட் வீரர்
(சச்சின் - குமார் சங்ககார - சுனில் கவாஸ்கர்)

4. மனித உடலில் வியாதிகளிடமிருந்து தற்காத்துக்கொள்ளும் (Immunity) செல்கள் உருவாகும் பகுதி
(அப்பென்டிக்ஸ் - ஈரல் - இரைப்பை)

5. 'புலிக்குப் பிறந்தது .....'
(புலிக்குட்டியாகும் - பூனையாகுமா - எலியாகுமா)

6. 'இது வியங்கோள் வினைமுற்று' எனப்படும்
(அஞ்சேல் - அறிந்திலன் - வாழ்க)

பெயர் : .....

முகவரி: .....

.....

அனுப்பவேண்டிய முகவரி:
விவிலியம் கற்போம் / அறிவை வளர்ப்போம்– 127
தொண்டன்
அ. பெ. எண் – 44
மட்டக்களப்பு.

பரிசு அனுப்பவேண்டிய தபாலகம்:

.....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போட்டி முடிவுகள்...

## விவிலியம் கற்போம் - 125 விடைகள்

காலடி, வாழ்நாள், நாட்டை, நலம், உணவை, யோசுவா, கட்டளைப்படியே, இராகாபு, வந்தனர், அடையாளத்தையும்

## அறிவை வளர்ப்போம் - 125 விடைகள்

1. மகாபாரதம்
2. மதுரை
3. செவ்வாய்
4. பிரக்டோஸ்
5. பாம்பறியும்
6. பண்புத்தொகை

**பரிசுகள் - அனுசரணை: அருள்தந்தை. அன்ரனி குரூஸ் CRS**

**போட்டியின் இரு பிரிவுகளுக்கும் சரியான விடைகளை அளித்து 300/= பரிசு பெறுபவர்**

- ர. ஜதுஷ்டிகா,
  இல. 14/6, காளிகோவில் வீதி,
  புன்னைச்சோலை,
  மட்டக்களப்பு.

**ஒரு பிரிவுக்கு மட்டும் சரியான விடைகளை எழுதி 200/= பரிசு பெறுவோர்**

- திலுக்ஷியா ஒக்கஸ்,
  இல. 26, பற்றிமாகிரி ஒழுங்கை,
  தாண்டவன்வெளி, மட்டக்களப்பு.
- சந்திரகுமார் சந்தோஷ்,
  171 ஊ, அன்னைபுரம்,
  சொறிக்கல்முனை, சம்மாந்துறை.
- டி. துஷான் ஜெஸ்லி,
  பிள்ளையார் கோவில் வீதி,
  பாண்டிருப்பு - 01,
  கல்முனை.

**சிறுவர் சிறுமியருக்கான வர்ணம் தீட்டும் போட்டி 77 முடிவுகள்**

- **முதலாம் பரிசு - 400/=**
  மெக்கன்சி ஸ்பெக்,
  பிரதான வீதி,
  வாழைச்சேனை.
- **இரண்டாம் பரிசு - 300/=**
  ஜோண் ஜீதேசன் ஜெயராஜ்,
  # 65/2, திருச்செந்தூர் முருகன்
  கோவில் வீதி, கல்லடி,
  மட்டக்களப்பு.
- **மூன்றாம் பரிசு - 200/=**
  A. கெனிஷா,
  இல. 169/1 A,
  லூர்த்து மாதா வீதி,
  பார்வீதி, மட்டக்களப்பு.

போட்டியில் பங்குகொண்ட அனைவருக்கும் எமது நன்றி. (ஆ – ர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2013 டிசம்பர் 15ம் நாள் மட்டக்களப்பில் நடைபெற்ற தேசிய நத்தார் விழா நிகழ்வுகளிலிருந்து....

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org